**மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர்கல்வி தொடர்பான தேசிய நிலையம்(NCAS)**

# பதின்மூன்றாவது ஆண்டறிக்கை

2017

## தூரநோக்கு

"மானிடவியல் மற்றும் சமூக
விஞ்ஞானத் துறையில் அறிவு,
வளங்கள், ஆராய்ச்சிகள், கற்கை
மற்றும் சமூகச்
செயற்பாடுகளுக்கிடையில்
பரஸ்பர புரிந்துணர்வை
கட்டியெழுப்பி, சிறப்புத்தேர்ச்சி
பற்றிய தேசிய மற்றும் சர்வதேச
புகழைப் பெற்ற நிறுவனமாக
உருவெடுத்தல்."

## செயற்பணி

" சகல இலங்கைப் பல்கலைக்கழங்களிலும் கல்வி கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிகளை வலுப்படுத்துவதற்கு மற்றும் மேம்படுத்துவதற்கான தேவைகளை இனங்கண்டு, ஆராய்ச்சி மற்றும் கொள்கைப் பங்களிப்பின் ஊடாக நாட்டிலும் சமூகத்திலும் அபிவிருத்திக்கு பல்கலைக்கழகங்கள் பங்களிப்புச் செய்தல் வேண்டுமென புரிந்து கொண்டு NCAS கோட்பாட்டுரீதியாகவும் பிரயோகரீதியாகவும் ஆகிய இரண்டு வகையிலும் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத் துறையில் பட்டப்பின் படிப்பு பட்டங்கள் மற்றும் வேறு ஆராய்ச்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியதுடன் அத் திசையில் கல்வியலாளர்களை முன்னிலைப்படுத்தி மற்றும் நலன்களை வழங்கி உயர் சிந்தனை மற்றும் ஆக்க ரீதியான புத்தாக்கங்களை மேம்படுத்தல் வேண்டும்.NCAS அதன் குறிக்கோள்கைள அடைந்து கொள்வதற்கு தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் வலையமைப்புச் செய்து இலங்கையில் பல்கலைக்கழகங்களில் பிரதான சபையாக இருத்தல்."

## முன்னுரை

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர் கல்வி நிறுவனம் தொடர்பான தேசிய நிலையம்(NCAS) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 24 ஆம் (அ) பிரிவின் கீழான 2005 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாம் இலக்க கட்டளைச்சட்டத்தின் கீழ் சட்டரீதியாக உருவாக்கப்பட்டது என்பதுடன் இந்நிலையமானது மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்களின் ஆய்வு மற்றும் அறிவார்ந்த தொடர்பாடலுக்கான மையம் ஆகும். இது கல்வியளாளர்கள் மத்தியில் பிரதிபலிப்புச் சிந்தனை, புத்தாக்கம், படைப்பாற்றல் மற்றும் அசல் கண்டுபிடிப்புக்களை ஊக்குவிக்கின்றது.

உயர்கல்வி அமைச்சின் பிரதான மானிய விருது வழங்கும் மையமாக விளங்கும் NCAS இது வரை கல்வியியளாளர்கள் 478 பேருக்கு தமது பட்டப்பின் கற்கையினை உள்நாட்டில் அல்லது வெளிநாடுகளில் தொடர்வதற்குரிய நிதியுதவியினை அளித்து வந்துள்ளது. மேலும் ஆராய்ச்சி முறைமைகள், புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு மற்றும் தொடர்பான வேறு துறைகளில் தமது பட்டப்பின் கற்கையினை மேற்கொள்வதற்குரிய தொடர்ச்சியான பயிற்சியினை கல்வியியலாளர்களுக்கு வழங்கி வருகிறது. 2013 ஆம் ஆண்டிலிருந்து NCAS ஆனது பல்கலைக்கழகங்ககளின் நிர்வாக ஊழியர்கள் மற்றும் நிர்வாகம் சாராத ஊழியர்களுக்கு பயிற்சியினை வழங்குவததற்காகத் தம்மை விரிவுபடுத்திக் கொண்டுள்ளது. அதனடிப்படையில், கல்வியியலாளர்களின் இயலுமைகளை, பல்கலைக்கழகங்களின் நிர்வாக மற்றும் நிதி முகாமைத்துவங்களை முன்னேற்றுவதற்குமாக பல்வேறு செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. 2017 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பிரதான கற்கைநெறிகளாக புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுக் கற்கைநெறிகள் ( SPSS, AMOS,.. போன்றன) வியாபார மற்றும் நிர்வாக எழுத்துத் திறன், நிர்வாக எழுத்துத் திறன் , கணினி மென்பொருள் கற்கைநெறிகள் (MS EXCEL போன்றன) என்பவற்றைக் குறிப்பிடலாம்.

பல்கலைக்கழக ஊழியர்களுக்காக வேண்டி நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மிகவும் வெற்றிகரமான முறையில் இருந்ததுடன் அதனால் சகல கல்வி சார் ஊழியர்கள் மற்றும் ஆய்வாரள்கள், நிர்வாக ஊழியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோர் அதிலிருந்து மிகுந்த பயனைப் பெற்றுக் கொண்டனர். விஞ்ஞான பூர்வமான கொள்கைகளை அடியொட்டி கலை, மானிடவியல், மற்றும் சமூக விஞ்ஞானங்களில் உள்ள பட்டப்பின்பட்ட பட்டதாரிகளுக்கு அவர்களுடைய ஆய்வுத்திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான மிகச் சிறப்பான பயிற்சினை வழங்குவதே இதன் பிரதான நோக்கமாகும். பங்கேற்பாளர்களின் தத்துவ ரீதியிலான மற்றும் அனுபவ ரீதியிலான ஆராய்ச்சித் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் இவ்விரிவான கற்கைநெறிகளை நிபுணத்துவக் குழுவானது நடத்தி வருகிறது. விரிவுரைகளானவை இலத்திரனியல் கற்கை வளங்கள் மற்றும் மென்பொருள் பிரயோகங்கள் வாயிலாக இடம்பெற்று வருகின்றன. NCAS இல் ஸ்தாபிக்கப்பட்ட கணிணி ஆய்வகமானது பட்டப்பின் பட்டதாரிகளுக்கு புள்ளிவிபரவியல் பயிற்சியினை வழங்கி வருகிறது. NCAS ஆனது அதன் இணையதளத்தின் ஊடாக E.நூலகப் (e-library) பயன்பாட்டு வசதியினை ஆய்வாளர்களுக்கு வழங்கி வருகிறது. 2017 ஆம் அண்டில் NCAS இனால் சாதனை படைக்கப்பட்ட முக்கியவொரு செயற்பாடானது ஹில்டன் கொழும்பு ரெசிடென்சஸ் (ஜெய்க் ஹில்டன்) 2017 திசெம்பர் மாதம் 20 இல் நடாத்தப்பட்ட 4 ஆவது வருடாந்த ஆராய்ச்சி மாநாடாகும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் மொஹான் த சில்வா அவர்கள் இதன் ஆரம்ப நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்ததுடன், தெற்காசியப் பல்கலைக்கழகம், புது டில்லி, உப தலைவர், பேராசிரியர் சசன்க பெரேரா **'சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியலை மீட்டெடுத்தல்: தெற்காசியாவிலிருந்து குறிப்புக்கள்'** என்னும் தலைப்பிலான தொடக்க அமர்வுக்கான முக்கிய உரையினை வழங்கினார். NCAS இன் ஆய்வுக்கட்டுரை கோரல் அறிவித்தலுக்கான பதிளளிப்பின் போது NCAS ஆனது 96 ஆய்வுக் கட்டுரைகளை (விரிவான ஆய்வுச்சுருக்கங்களை) பெற்றதுடன் அதில் 62 ஆய்வுக் கட்டுரைகளானவை

ஆரம்பத்திலேயே மாநாட்டிற்காக வேண்டி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருப்பினும், மாநாட்டிற்றகாக வேண்டி பதிவு செய்திருந்த எழுத்தாளர்கள் இணை எழுத்தாளர்கள் உட்பட 59 பேர்களாவர். ஏற்றுக் கொள்ளப்பட்ட எண்ணிக்கையில், 48 ஆய்வுக் கட்டுரைகள் 4 சமாந்திர பிரிவுகளில் இருந்து எழுத்தாளர்களால் முன்வைக்கப்பட்டன. இவ் இணக்கத் திட்டத்தின் படி மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்துக்கான உயர் கற்கைகளின் அதியுயர் நிலையமாக NCAS இனை நாம் தொடர்ந்து அபிவிருத்தி செய்து வருகிறோம்.

**பேராசிரியர். பி.எஸ்.எம் குணரத்ன**
**பணிப்பாளர்**

# உள்ளடக்கங்கள்


| | |
|---|---|
| நிறுவனத் தகவல்கள் | 5 |
| அறிமுகம் | 6-7 |
| முகாமைத்துவம் | 8-19 |
| NCAS பதவியணியினர் | 20-21 |
| செயலமர்வுகள்/பாடநெறிகள்/ சமர்ப்பிப்புக்கள் | 22-27 |
| தகவல் தொழில்நுட்ப வளங்கள் | 28 |
| புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் | 29-42 |
| நூலகம் / E வளங்கள் | 42 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை | 43 |
| நிதியியல் அறிக்கை | 44-60 |
| கணக்காய்வு அறிக்கை | 61-69 |


**பணிப்பாளர்**
பேராசிரியர்.பி.எஸ்.எம் குணரத்ன

**சிரேஸ்ட உதவிப் பதிவாளர்**
திருமதி.எச்.பி ஹேனேகம
திருமதி. ஜி. பி விக்ரமாரச்சி

**சிரேஸ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்**
திருமதி.ஸெ.டி.எல் தர்மசேன
திருமதி.எ.எஎஸ் சிந்தனி

அறிமுகமானது 2005
பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டம்.1978 இன் 16 ஆம் இலக்கம்


**உயர் கற்கைக்கான தேசிய நிலையம்** (NCAS)
6A, சுகஸ்தான் கார்ட்ன்ஸ்
வோட் பிளேஸ்
கொழும்பு-07
இலங்கை

தொலைபேசி.: 94-11-2685850, 2693974
தொலைநகல: 94-11-2693975
மின்னஞ்சல் : info@ncas.ac.lk
இணையதளம் :www.ncas.ac.lk

## நிறுவனத் தகவல்கள்

| | | |
|---|---|---|
| நிறுவனத்தின் பெயர் | : | மானிட விஞ்ஞானம் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர் கல்விக்கான தேசிய நிறுவனம் (NCAS) |
| பதிவு செய்யப்பட்ட அலுவலகம் | : | இல: 6A, சுகுஸ்தான் கார்ட்ன்ஸ், வோர்ட் பிளேஸ், கொழும்பு 07 |
| நிலைப்பாடு மற்றும் சட்டப்படிவம் | : | 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் கீழ் 2015 ஒக்தோபர் மாதம் கட்டளைச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட அரச நியதிச் சட்ட சபையாகும். |
| நிதிகளின் ஆதாரம் | : | திறைசேறி நிதி |
| நிதிக் காலம் | : | 2017 ஜனவரி 01 முதல் 2017 திசெம்பர் 31 வரை |
| பணிப்பாளர் | : | பேராசிரியர். பி.எஸ்.எம் குணரத்ன |
| கணக்காய்வாளர் | : | கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம், இலங்கை<br><br>உள்ளகக் கணக்காய்வாளர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு |
| வங்கியாளர்கள் | : | இலங்கை வங்கி, டொறிங்டன் கிளை |
| தொடர்பு விபரங்கள் | : | தொலைபேசி : 011-2685850, 0112693974<br>தொலைநகல் : 0112693975<br>மின்னஞ்சல் : info@ncas.ac.lk<br>இணையதளம் : www.ncas.ac.lk |

# அறிமுகம்

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர் கல்வி நிறுவனம் தொடர்பான தேசிய நிலையம்(NCAS) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 24 ஆம் (அ) பிரிவின் கீழான 2005 ஆம் ஆண்டின் இரண்டாம் இலக்க கட்டளைச்சட்டத்தின் கீழ் சட்டரீதியாக உருவாக்கப்பட்டதுடன் 2005 ஒக்டோபர் 19 ஆம் திகதி இலக்கம் 1415 / 17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக பிரகடனப்படுத்தப்பட்டது, அதன் பின்னர் 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி 1567 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகையில் வெளியிடடப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சமூகவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர் கல்விக்கான தேசிய நிறுவனம். திருத்தம் செய்தல் முடித்து கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் திருத்தம் செய்யப்பட்டது. (என்.சி.ஏ.எஸ்)பிரதானமாக ஸதாபிக்கப்பட்டது.

இது தேசிய பல்கலைக்கழக கட்டமைப்பின் சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் ஆகிய துறைகளில் சேவையாற்றுகின்ற ஆய்வு சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்யும் முகமாக உருவாக்கப்பட்டதாகும். பேராசிரியர் சேனக பணடார நாயக்க அவர்கள் மற்றும் உரிய துறைகளில் சிரேஸ்ட விரிவுரையாளர்கள் பலர் ஊடாக இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. துரிதமாக பரவிவருகின்ற தேசிய பல்கலைக்கழக கட்டமைப்பின் சமூக விஞ்ஞானம் மற்றும் மாானுடவியல் துறைகளில் ஆய்வுத்தேவைகளினை மேற்கொள்வதற்காக தற்போது செயற்படுத்தப்படுகின்ற பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியக நிறுவனம் ஒன்றை அமைக்க வேண்டியதன் தேவை எழுந்தது. தகைமைகளை அடைந்து கொள்கின்ற மற்றும் பல்கலைக்கழக அனுமதியினை எதிர்பார்க்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையில் வளர்ச்சிக்கு பதில் ஒன்றாக கொள்கைகளினை மாற்றம் செய்வதுடன் 1970 களின் நடுப்பகுதி முதல் நாட்டில் மாகாணங்கள் பலவற்றில் பதிய பல்கலைக்கழகங்கள் பல திறக்கப்பட்டன. இந்தப் புதிய நிறுவனங்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்பபுவதற்காக தேவையான பதவியணியின் தேவையினை நிறைவு செய்வதற்கு அமைக்கப்பட்டிருந்த பல்கலைக்கழகங்கள் ஊடாகவாகும். கற்ற சமூகத்தின் பற்றாக்குறை மற்றும் வெற்றிகரமான பல்கலைக்கழகங்களில்கூட செயற்படுத்தல்கள் மோசமடைந்தமை இங்கு இறுதியாக பெறுபேறானது. புதிதாக உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு அனுபவமிக்க தகைமைகள் பெற்ற விரிவுரையாளர்கள் குறைவான இருந்ததுடன் ஆராய்ச்சி மற்றும் உயர் கற்கைச் செயற்பாடுகளினை மேற்கொள்வதற்கு வசதிகளும் குறைவாக இருக்கின்றன. மானுடவியல் கற்கை மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகிய துறைகளில் ஆட்சேர்ப்பு பெறப்பட்ட புதிய அலுவலர்கள் பட்டப்பின் கற்றைகளை மேற்கொள்வதற்கு ஊக்கப்படுத்துவதன் ஊடாக பயிற்சியளித்தல் புதிய பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டதுடன் எழுந்த வெற்றிடங்களை நிரப்பும் முகமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். என்.சி.ஏ.ஸ். இளம் ஆசிரியர்களுக்கு ஆராய்ச்சி முறைமைகள் கருத்துக்களை கட்டியெழுப்பல் ஆராய்ச்சி தொடர்பான தேவையான புள்ளிவிபரவியல் மற்றும் கற்கைக் கட்டுரைகள் தொடர்பாக தேவையான ஆவண திறன் போன்றன பற்றி அறிவுறுத்தல் மற்றும் அவர்கள் பட்டப்பின்படிப்பு கற்கை நடவடிக்கைகளுக்கு ஆயத்தம் செய்தல் தொடர்பாக உதவி புரிகின்றது.

மனித வளங்களின் அபிவிருத்தி மற்றும் உயர் ஆராய்ச்சி கற்கைகள் தொடர்பாக வழங்கப்படுகின்ற அனுசரணைகளின் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டு நிறைவடையும் போது நிதி ஏற்பாடுகள் 483 வரை அதிகரித்துள்ளது. கல்வியியலாளர்களுக்கு தமது உயர்கல்வி நடவடிக்கைகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாக முன்னெடுத்துச் செல்வதற்காக அரச பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக நிதியங்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்பொழுது என்.சி.எ.எஸ் அரச பல்கலைக்கழக கட்டமைப்பின் மனித வளங்களின் அபிவிருத்தி தொடர்பில் பிரதான வளவாளராக உருவெடுத்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழவின் உபதலைவர் பேராசிரியர் பி.எஸ்.எம் குணரத்ன அவர்கள் 2015 ஓகஸ்ட் 15 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் என்.சி.ஏ. எஸ் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்

துறைகளில் கற்கை பதவியணியில் ஆராய்ச்சி இயலுமைகளினை மேம்படுத்துவதினை இலக்காகக் கொண்டு புதிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றினை ஆரம்பித்தார். குறிப்பிட்ட துறையினுள் பாரியளவில் பயன்படுத்தப்படுகின்ற என்.வி.ஐ.வி.ஓ. ஏ.எம்.ஓ.ஸ்.மற்றும் இ.வீவ்ஸ் (NVIVO, AMOS, EVIEWS) ஆகிய புதிய மென்பொருள்கள் ஊடாக பண்புசார் மற்றும் போதியளவிலான ஆராய்ச்சி கருவிகள் தொடர்பில் இளம் கல்வியியாலாளர்களின் திறன்களினை வலுப்படுத்துவதுடன் பலதரப்பட்ட சமூக தேவைகளினை முன்கொண்டு அவற்றுக்கு பதில் வழங்குவது இந்த புதிய பயிற்சி திட்டங்கள் அறிமுகம் செய்வதன் பிரதான குறிக்கோள்களாகும்.

மேலும் என்.சி.எ.எஸ் ஆராய்ச்சி கருத்துக்களினை கட்டியெழுப்பல் சமூக விஞ்ஞான ஆராய்ச்சி முறைமைகள் மற்றும் எஸ்.பி.எஸ்.எஸ். இனை பயன்படுத்தி புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் / செயலமர்வு போன்ற தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. விழாக்களில் விளக்கங்கள் வேறாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. என்.சி.ஏ.சி உயர் கற்கை பிரிவினுள் ஆராய்ச்சி மற்றும் உயர்கல்வியின் மேம்பாடு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் மீளாய்வு வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் பயன்கள் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பிரிவுகளுக்கு மட்டுப்படுத்தப்படாததுடன் தொடர்புடைய வேறு ஏனைய முறைகளுக்கும் பரந்து சென்றுள்ளது.

மீளாய்வு வருடத்தினுள் என்.சி.எ.எஸ் ஊடாக என்.சி.எ.எஸ் புலமைப்பரிசில் பெற்றவர்களின் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளினை பிரபல்யப்படுத்துவதற்கு மற்றும் பிரசுரிப்பதற்கு இடவாய்ப்பினை உருவாக்கி நான்காவது வருடாந்த அராய்ச்சி மாநாட்டினை 2017 திசெம்பர் 20 ஆந் திகதி ஹில்டன் கொழும்பு ரெசிடன்சீஸில் நடத்தப்பட்டது.

# முகாமைத்துவம்

## கட்டமைப்புக்கள் / கூட்டங்கள்

2008 செப்டெம்பர் 15 ஆம் திகதி 1567 ஆம் இலக்க அதிவிசேட வரத்தமானி பத்திரிகையில் வெளியிடப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய கற்கைகளுக்கான தேசிய நிலையம்.( திருத்தம் செய்தல் ) கட்டளைச் சட்டத்திற்கேற்ப நிர்வாக சபை மற்றும் முகாமை சபை கீழுள்ளவாறு அங்கத்தவர்களை உள்ளடக்குகின்றது:-

## நிர்வாக சபை மற்றும் முகாமைத்துவ சபை

நிர்வாக சபை என்.சி.எ.எஸ். இன் பிரதான கொள்கைகளினை உருவாக்கல் மற்றும் நிர்வாக அதிகாரம் பெற்ற ஒரு அமைப்பாக இருப்பதுடன் வருடம் ஒன்றுக்கு இருமுறை கூடுகின்றது.

முகாமைத்துவ சபை என்.சி.எ.எஸ் யின் நிர்வாக மற்றும் கற்கை பிரிவாக இருப்பதுடன் வருடத்தின் பொது ஒழுங்குமுறையான கூட்டங்கள் 7 நடாத்தப்பட்டுள்ளன.

**முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்கள் உள்ளடக்கம் பின்வருமாறு அமைகிறது:**

| | |
|---|---|
| பேராசிரியர்.பி.எஸ்.எம் குணரத்ன<br><br>பணிப்பாளர் - (என்.சி.ஏ.எஸ் தலைவர் -சி.ஒ.எம். ( 2015 ஆகஸ்ட் 15 முதல் ) | பேராசிரியர் பி.எஸ்.எம். குணரத்ன,நிதிப் பேராசிரியர் மற்றும் கல்வி உட்பட உயர் கல்வி பற்றிய முன்னிலையான தேசிய அபிவிருத்தி தொடர்பான பலவற்றின் புகழ் மிகு பதவிகளை வகித்துள்ளார் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உபதலைவர் பதவியை பொறுப்பேற்பதற்கு முன்னர் பேராசிரியர் குணரத்ன அவர்கள் கொழும்பு பல்கலைக்கழக வணிக பிரிவின் பகுதித் தலைவராகவும் முகாமைத்துவ மற்றும் நிதிப்பிரிவின் பட்டப்பின்படிப்பு மற்றும் நடுநிலை தொழில் சார் அபிவிருத்தி அலகின் ஒருங்கிணைப்பாளராகவும் முகாமைத்துவ மற்றும் நிதிப் பீடத்தின் பீடாதிபதியாகவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிப்பாடசாலையின் நிர்வாக சபையின் அங்கத்தவராகவும் வியாபார முகாமைத்துவ நிறுவனத்தின் (என்.ஐ.பி.எம்) நிர்வாக சபை அங்கத்தவராகவும் தேசிய கல்வி நிறுவனத்தின் ( என்.ஐ.இ.) நிர்வாக சபையின் அங்கத்தவராகவும் தேசிய மானிடவியல் வளங்கள் அபிவிருத்தி சம்மேளனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்(எஸ்.எல்.ஐ.டி.ஏ) பட்டப்பின் படிப்பு பாசாலையின் கற்கை நடவைடிக்கைகள் பற்றிய சபையின் அங்கத்தவராகவும் சேவையாற்றியுள்ளார்.பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் (எஸ்.எல்.ஐ.டி.ஏ) பட்டப்பின் படிப்பு பாசாலையின் கற்கை நடவடிக்கைகள் பற்றிய சபையின் அங்கத்தவராகவும் இவர் சேவையாற்றியுள்ளார்.<br><br>பேராசிரியர் குணரத்ன அவர்கள் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் வியாபார முகாமைத்துவம் பற்றிய கற்கையின் (கௌரவ பட்டம்) கொழும்பு பல்கலைக்கழகத்தின் வியாபார நிர்வாகம் பற்றிய முதுமாணி பட்டத்தினையும் பெற்றுள்ளார். யப்பான் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மொன்புக்கா ககுஸ்கோ |

| | |
|---|---|
| | புலமைப்பரிசிலினை வெற்றிகொண்ட அவர் அதன் பிரகாரம் யப்பானில் சுக்கபா பல்கலைக்கழகத்தின் நிதி பற்றிய விஞ்ஞானமானிப் பட்டம் மற்றும் கலைமாணி பட்டத்தினையும் பூர்த்தி செய்துள்ளார்.<br><br>ஐக்கிய இராச்சியத்தின் பொதுநலவாய அமைப்பின் பட்டப்பின் படிப்பு கலாநிதி பட்ட புலமைப்பரிசிலினை பெற்றுக் கொண்ட பேராசிரியர் குணரத்ன அவர்கள் (ஐக்கிய இராச்சியத்தில்) மென்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி நிதி பற்றிய நிறுவனத்தின் வெளிவாரி விரிவுரையாளராகவும் இருக்கின்றார் மேலும் விஞ்ஞான மேம்பாடு தொடர்பான யப்பான் சங்கத்தின் ஜே.எஸ்.பி.எஸ். புலமைப்பரிசில் பெறுனராகவும் பேராசிரியர் குணரத்ன அவர்கள் யப்பான் யொக்கோகாமா தேசிய பல்கலைக்கழகதர்தின் வெளிவாரி ஆராய்ச்சி அங்கத்தவராகவும் இருந்துள்ளார். |
| பேராசிரியர்.எ.எஸ்.கெ ஜயக்கொடி 2015 யூன் மாதம் 19 ஆம் திகதி முதல் | பேராசிரியர் ஏ.எஸ்.கே.ஜயக்கொடி அவர்கள் என்.சீ.ஏ.எஸ். நிதியளிப்பின் பிரகாரம் இலங்கை முகாமைத்துவம் பற்றிய பட்டப்பின்படிப்பு நிறுவனத்தில் பேராசிரியர் ரொவிஸ் பெரேரா அவர்களின் மற்றும் இந்தியாவின் முகாமைத்துவம் பற்றிய க்ரேட் லேக்ஸ் நிறுவனத்தின் பேராசிரியர் வெங்கட் ஆர். கிருஸ்ணன் அவர்களின் மேற்பார்வையின் கீழ் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம் பற்றிய பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் தனது கலாநிதி பட்டத்தினை நிறைவு செய்தார். இவர் ஆராய்ச்சி கற்கைகள் பற்றிய தலைமைத்துவ கலையினில் வெகுசன ரீதியாக எழுகின்ற பிரச்சினையாக அறிமுகம் செய்த மாற்றங்களை அறிமுகம் செய்தல் மற்றும் அவைகளுக்கு தலைமைத்துவம் வழங்கிய திருமதி கமலா லியனகே அவர்களின் பேராதெனிய பல்கலைக்கழக விரிவுரையாளர் விலகிச் சென்றதுடன் இலங்கை வியாபார நிறுவனங்களின் மாற்றங்களின் ஆரம்பத்துடன் விலகிச் சென்ற வினாவிற்கு விடை தேடுவதற்காக முயற்சி செய்தார். தலைவரினால் பின்பற்றுனர்கள் சுயமாக முரண்பாடுகளை தீர்த்துக் கொள்கின்ற விதமாக அதன் பிரகாரம் பின்பற்றுனர்கள் தனிப்பட்ட ரீதியாக தமது தனித்துவத்தினை உருவாக்கிக் கொள்வதற்கு பின்பற்றுனர்கள் சுயமாக அர்ப்பணிப்புடன் மேலதிக முயற்சியினை வழங்கியதுடன் தலைவரில் தங்கி இருப்பதன் ஆழத்தினையும் உணர்ந்து அதன் ஊடாக தலைவரின் முயற்சியினை தொடர்ச்சியாக கொண்டு செல்வதற்கு உதவி புரிந்ததுடன் அவருடைய அர்ப்பணிப்பு மேலதிக முயற்சி மற்றும் செயற்பாடுகளினை நீக்கிக் கொண்டதுடன் தலைவர் முயற்சியினை வலுப்படுத்துதல் நலிவடைந்தது. இந்த நிலைமையானது பொதுவாக பார்க்கின்றபோது முன்னெச்சரிக்கை அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. |
| கலாநிதி. டிபி.எஸ். சந்த்ரகுமார (2016 ஆகஸ்ட் 16 முதல்) | கலாநிதி.டிபி.எஸ் சந்த்ரகுமார 1986 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைகத்தில் கலைமாணி சிறப்புப் பட்டத்தை (பொருளியளில்) பெற்றுள்ளதுடன் தனது |

| | |
|---|---|
| | முதுமாணிப்பட்டத்தை 1993 ஆம் ஆண்டு இந்தியாவின் கேரளாப் பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்தார்.மேலும் சுவீடன் நாட்டின் உப்ஸலா மற்றும் கோதென்பேர்க் ஆகிய பல்கலைக்கழகங்களில் இவர் பயிற்சி பெற்றுள்ளதுடன் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்டத்தையும் பூர்த்தி செய்தார். தற்போது இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதியாகக் கடமையாற்றுகிறார்.<br>கலாநிதி சந்த்ரகுமார அவர்கள் கோதென்பர்க் மற்றும் உப்ஸலா ஆகிய சுவீடன் பல்கலைக்கழங்களிலும் சுற்றுச்சூழல் மற்றும் புவி விஞ்ஞான நிக்கொலஸ் கல்லூரியிலும் அமெரிக்கா டியுக் பல்கலைக்கழகத்தின் சர்வதேச அபிவிருத்திப ட்டதாரிக் கல்லூரியிலும் மற்றும் ஜப்பான் நாட்டின் நாகொயா பல்கலைக்கழகத்திலும் அவுஸ்திரேலியாவின் மொனாஸ் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத் திணைக்களத்திலும் பல வேறுபட்ட ஆய்வுகள் மற்றும் தோழமை நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றினைச் செய்து பயிற்சி பெற்றுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.இவர் அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பில் சிரேஷ்டமான ஆய்வாளராகத் திகழ்ந்துள்ளார்.மேலும் சொல்லப் போனால் இவர் இளமாணிக்கற்கை தொடக்கம் கலாநிதிப்பட்டம் வரையிலான மாணவர்களுக்கு ஒப்பீட்டு ஆய்வு மற்றும் ஆய்வு முறைமைகளைக் கற்பிப்பதில் ஈடுபட்டும் வருகின்ற ஒருவராவார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். |
| பேராசிரியர். ஐ.எம்.கெ. லியனகே (2016 ஏப்ரில் 01 ஆம் திகதி முதல்) | விஞ்ஞான கற்கைப் பிரிவில் சேவையாற்றுகின்ற சிரேஸ்ட பேராசிரியரொருவரான கலைமாணி,கௌரவ கலை முதுமாணி பேராதெனிய மற்றும் கலைப்பட்டம் (டோக்கியொவில்) கற்கை ஆய்வுகள் 25 க்கு அதிகமான எண்ணிக்கையினை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள இவர் நூல்கள் பொழிப்புச் செய்யப்பட்ட ஆக்கங்களின் அத்தியாயங்கள் பிரதானமாக அரசியல் விஞ்ஞானம் பற்றிய பிரச்சினைகள் மற்றும் கற்கை பற்றிய சிபாரிசுகள் செய்யப்பட்ட மற்றும் செய்யப்படாத வாரசஞ்சிகைகளில் கடிதங்கள் மற்றும் கற்கை ரீதியான ஒப்படைகளினை வெளியிட்டுள்ளார். இவர் மொன்பூசோ புலமைப்பரிசில் (1985டோக்கியொ பல்கலைக்கழகம்) றொட்டரி யெனேயாமா பல்கலைக்கழகம் (1988 க்யோ பல்கலைக்கழகம்) கொபைசி செசுக்செக்சுட்டாரோ ஞாபகார்த்த புலமைப்பரிசில் (1989 ) , காமிர ஆசிய ஒத்தழைப்பு அடிப்படைகள் புலமைப்பரிசில் ( 1989 ) டக்காக்கோ புலமைப்பரிசில் (1989), சுக்குசாவாயுக்கிவி புலமைப்பரிசில் (1990) ,அபிருவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் காணப்படுகின்ற பொருளாதார நிறுவனங்களின் புலமைப்பரிசில் டோக்கியோ(1997) ,பொதுநலவாய அமைப்பின் புலமைப்பரிசில் (1998 லண்டன் பல்கலைக்கழகம்) புல்பிரைட் பல்கலைக்கழகம் (2004 அமெரிக்க பல்கலைக்கழகம் வொஷிங்டன் டி.சி.2013) ஆகிய மிகவும் புகழ்பெற்ற புலமைப்பரிசில்கள் பலவற்றை சுவீகரித்துள்ளதுடன் கற்றல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் பல்கலைக்கழக நிர்வாகம் ஆகிய பிரிவுகளில் தேசிய மற்றும் சர்வதேச அனுபவங்கள் பலவற்றினை பெற்றுள்ளார்.) |

| | |
|---|---|
| பேராசிரியர்..சமந்தி சேனாரத்ன (2015 யூன் மாதம் 19 ஆம் திகதி முதல்) | திருமதி சமந்தி சேனாரத்ன அவர்கள் ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக்கழகத்தில் கணக்கீட்டு கற்கைப்பிரிவின் கணக்கீடு தொடர்பான பேராசிரியராவார். இவர் கணக்கீட்டு இளமாணிப் பட்டத்தில் முதல் தரச் சித்தியினை பெற்றிருப்பதுடன் வியாபார நிருவாகத்தில் பட்டம் மற்றும் நிதி பற்றிய விசேடமான முதுமாணி பட்டத்தினையும் பெற்றுள்ளார். சிறந்த ஆராய்ச்சியாளரான இவர் நிறுவனமும் நிர்வாகமும் நிலையான மற்றும் விபரமான அறிக்கையிடல் மற்றும் கணக்கீட்டுக் கற்கை போன்ற துறைகள் தொடர்பில் உள்நாட்டு மற்றும் வெளிநாடு என்ற ரீதியில் நூல்கள் பலவற்றை வெளியிட்டுள்ளார். அதுமட்டுமன்றி நிறுவன நிர்வாகம் பற்றிய துறையில் அவரது ஆராய்ச்சிப்பணிகளுக்காக அவர் விருதுகளினை வென்றுளதுடன் கணக்கீட்டுக் கற்கை மற்றும் கோட்பாட்டு ரீதியான அறிக்கையிடல் பற்றிய தொழில்சார் கணக்கீட்டு நிறுவனத்தின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட பேரவைகளில் சபை அங்கத்தவராகவும் பங்குபற்றியுள்ளார்.<br><br>இவர் தேசிய பல்கலைக்கழகங்கள் உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் இலங்கையின் உயர் கல்வி அமைச்சின் உலக வங்கி நிதி வழங்குகின்ற செயல்திட்டங்களின் விடயப்பரப்புக்களினை கட்டியெழுப்பல் மற்றும் நிலமைச்சான்றிதழ் செயற்பாடுகளுக்கு தனது பங்களிப்பினையும் தொடர்ச்சியாகச் செய்கின்றார். தற்போது இவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் உள்ளக தர சான்றிதழ் பிரிவின் பணிப்பாளராகவும் சேவையாற்றுகின்றார். |
| பேராசிரியர். இந்திர லால் த சில்வா (2012 ஜனவரி ஒன்று முதல்) | பேராசிரியர் டபிள்யு இந்திரலால் த சில்வா அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் புள்ளிவிபரவியல் விஞ்ஞானத்தின் சிரேஸ்ட பேராசிரியர் மற்றும் முன்னாள் பீடாதிபதியுமாவார். தற்பொழுது இவர் இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர்கற்கைக்கான தேசிய நிலையத்தின் ( என்.சி.ஏ.எஸ்.) சிரேஸ்ட ஆராய்ச்சி அங்கத்தவராக சேவையாற்றுகின்றார். இவர் நூல்கள் கல்வி சார் விடய ஆய்வுகள் பலவற்றை வெளியிட்டுள்ளதுடன் சர்வதேச மாநாடுகள் பலவற்றுக்கு ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்ப்பித்து புகழ்மிக்க சர்வதேசவார இதழ்களில் ஆராய்ச்சிகட்டுரைகள் 60 இற்கும் அதிகமானவற்றை வெளியிட்டுள்ளளார்.(மேலதிக விளக்கங்களுக்கு தயவு செய்து http.\\indhralal.elanka.net என்ற முகவரிக்குபிரவேசிக்கவும்) பேராசிரியர் த சில்வா அவர்கள் 1977 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி கற்கைகள் ( |

| | |
|---|---|
| | புள்ளிவிபரவியல் விஞ்ஞானம் பற்றிய ) தனது கலைப் பட்டத்தினை பெற்றதுடன் முறையே 1985 ஆம் ஆண்டில் 1990 ஆம் ஆண்டுகளில் கென்பரா என்ற அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் கலை முதுமாணிப்பட்டம் மற்றும் கோலிநிதி பட்டத்தினையும் பெற்றுள்ளார். இவர் 2004 ஆம் ஆண்டின் சசிகப்குரின் தேசிய பல்கலைக்கழகத்தில 1996-1991 காலத்தில் பொதுமக்கள் சுகாதாரம் பற்றி ஹாவார்ட் கல்லூரியின் வெளியக பேராசிரியராகவும் சேவையாற்றியுள்ளதுடன் 1990 தொடக்கம் 91 ஆம் ஆண்டு காலத்தில் அவுஸ்திரேலியாவின் தேசிய பல்கலைக்கழகத்தின் வெளிவாரி அதி புலமைப்பரிசில் பயனராக சேவையாற்றியுள்ளார். இவர் சிரேஸ்ட புல்பிரைட் புலமைப்பரலிசில் தக்ககேமி மற்றும் டொக்புலர் அடிப்படைகளின் புலமைப்பரிசில்கள் உள்ளடங்கலாக புகழ்மிக்க விருதுகள் பலவற்றை வென்றுள்ளார் இவர் ஐக்கிய நாடுகளின் அமைப்பின் துணை நிறுவனமான ஈ.எஸ்.சி.ஏ.பி., டபிள்யு.எச், யுன்.எவ்.பி.ஏ. யு.உன்.ஐ.சி.எவ். ஆகிய அமைப்புக்கள் பலவற்றில் ஆலோசகராகவும் செயலாற்றியுள்ளார். |
| பேராசிரியர். பி.ஸி பக்கீர் ஜெளபர் (2015 ஏப்ரல் 10 திகதி முதல்) | பேராசிரியர் பி.சி.பக்கீர் ஜெளபர் அவர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தின் பீடாதிபதியாவார். அவரின் 42 வருட பரந்த சேவைக்காலத்தில் கடந்த 30 வருடங்கள் அவர் திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வியியலாளரானாக சேவையாற்றயுள்ளார். அவருக்கு இலங்கையில் மட்டுமல்லாது வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிலும் பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமானி (கௌரவ) (2015 ஒக்டேபார் 12 ஆம் திகதி முதல்) பட்டமும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் தங்கப்பதக்கம் மற்றும் அதிவிசேட சித்தியுடன் கூடிய கல்வி தொடர்பான பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவையும் திறந்த பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டம் மற்றும் கனடாவின் சைமன் புரோசர் பல்கலைக்கழகத்தில் ஈ.டி.பி.பட்டம் என்பனவற்றினை பெற்றுள்ளார். இதற்கு மேலதிகமாக இவர் புது டில்லி ஐ.யி.என்.ஓ.யு நிறுவனம் கொழும்பு திறந்த பல்கலைக்கழகம் மற்றும் ஜேர்மனியின் லிப்சீக் பல்கலைக்கழகத்தில் தொலைக்கல்வி நடத்தை ரீதியான உளவியல் மற்றும் விசேட தேவையுடன் கூடிய கற்கை பற்றி பல்வேறுபட்ட பயிற்சி செயலமர்வுகளுக்கும் பங்கு பற்றியுள்ளார். அது மட்டுமல்லாது இவர் கற்கை பற்றிய நூல்கள் பலவற்றுக்கு ஆராய்ச்சிக்கட்டுரையினையும் வெளியிட்டுள்ளார். |
| பேராசிரியர்.தயாரத்ன பண்டா (2015 ஒக்டோபர் 12 ஆம் திகதி முதல்) | பேராதெனிய பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் பீடாதிபதியான பேராசிரியர் ஓ.ஜி. தயாரத்ன பண்டா அவர்கள் 1995 ஆம் ஆண்டில் பேராதெனிய பல்கலைக்கழகத்தின் பொருளாதார விஞ்ஞானம் பற்றிய முதல் தரச் சித்தியில் கலை கௌரவ பட்டத்தினையும் கோட்பாடு பற்றிய முதுமாணி பட்டத்தினையும் பெற்றுள்ளார். இவர் நுண்பொருளாதார விஞ்ஞானம் |

| | |
|---|---|
| | மற்றும் நிதி பொருளாதார விஞ்ஞானம் பற்றிய விசேட கற்கையினை சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் கலாநூரி பட்டத்தினையும் பெற்றுள்ளார். 1995 பொருளாதார விஞ்ஞானம் மற்றும் புள்ளிவிபரவியல் விஞ்ஞானம் தொடர்பான கற்கைப்பிரிவில் விரிவுரையாளரும் ஆவார். மேலும் சிரேஸ்ட விரிவுரையாளர் மற்றும் பேராசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். தற்போது இவர் பேராதெனிய பல்கலைக்கழகத்தில் பொருளாதார விஞ்ஞானம் மற்றும் புள்ளிவிபரவியல் விஞ்ஞானம் பற்றிய கற்கைப்பிரிவின் பேராசிரியராகவும் பணியாற்றுவதுடன் இவர் 2006 முதல் 2007 வரை கனடாவின் வொட்டுலு பல்கலைக்கழகத்தின் வெளிவாரி ஆராய்ச்சி பேராசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். மேலே குறிப்பிட்ட கல்வியியலாளர் பதவிகளுக்கு மேலதிகமாக இவர் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதியாகவும் கலைப்பீடத்தின் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் தலைவர் மற்றும் பேராதெனிய பல்கலைக்கழகத்தின் பொருளாதார விஞ்ஞானம் மற்றும் புள்ளிவிபரவியல் விஞ்ஞானம் பற்றிய கற்கைப்பிரிவின் பகுதித் தலைவர் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட நிர்வாக பதவிகளை வகித்துள்ளார். இவர் சர்வதேச ரீதியாக சிபாரிசு செய்யப்பட்ட வாரசஞ்சிகைகளுக்கு கட்டுரைகள் பலவற்றை வெளியிட்டுள்ளதுடன் சாகித்ய நூல்கள் மற்றும் புத்தக அத்தியாயங்கள் பலவற்றை வெளியிட்டும் உள்ளார். இவருடைய ஆராய்ச்சி சர்வதேச பொருளாதார விஞ்ஞானம் மற்றும் முழு அளவிலான பொருளாதார விஞ்ஞானம் பற்றிய பல்வேறு பட்ட கற்கைகளில் பூகோளரீதியாக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. நடைமுறை சர்வ பொருளாதார விஞ்ஞானம், நிதி பொருளாதார விஞ்ஞானம் பொருளாதார கொள்கைகள் பற்றிய பிரச்சினைகள், சர்வதேச பொருளாதார கோட்பாடுகள் மற்றும் வர்த்தக உடன்படிக்கைகள் இவருடைய ஆராய்ச்சி துறைகளில் உள்ளடங்குகின்றன. மேலும் இவர் கொள்கைகள் உருவாக்கல் கலந்துரையாடல்கள் மற்றும் சமகால பிரச்சினைகள் தொடர்பான விவாதங்களில் ஒரு நிபுணர் என்ற வகையில் பங்களிப்புச் செய்துள்ளார். |
| திருமதி.டபிள்யு.இந்திரா நாணயக்கார (2015 யூன் மாதம் 19 திகதி முதல்) | டபிள்யு. இந்திரா நாணயக்கார அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீடத்தின் பீடாதிபதியாவார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டமாணி ( கௌரவ பட்டம்) மற்றும் முதுமாணி பட்டத்தினையும் பெற்றுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளரான இவர் இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் சட்டத்தரணியுமாவார்.<br><br>தற்பொழுது இவர் ஆரம்ப பட்டம் மற்றம் பட்டப்பின்படிப்பு, கல்வி மட்டங்கள் மற்றும் கம்பனி சட்டம், சர்வதேச முதலீட்டுச் சட்டம், வியாபாரச் சட்டங்கள், வர்த்தக தீர்வைகள், மற்றும் வங்கிச் சட்டம் போன்ற துறைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளையும் |

| | |
|---|---|
| | மேற்கொள்கின்றார். தற்பொழுது இவர் சர்வதேச முதலீட்டுச் சட்டம் மற்றும் பூகோளமயமாக்கல் நிறுவனச்சட்டம், நுகர்வோர் தொடர்பான சட்டம், வங்கிச் சட்டம், போட்டித் தன்மைச் சட்டம் போன்ற துறைகள் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். |
| பேராசிரியர்.திரு.அத்துல ரணசிங்க (2012 ஜனவரி 1 முதல்) | பேராசிரியர் திரு அத்துல ரணசிங்க அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதார விஞ்ஞான கற்கைப்பிரிவின் பேரராசிரியராவார். தற்போது இவர் அப் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதியாகவும் பணியாற்றுகின்றார். இவர் பொருளாதார கோட்பாடுகள் பற்றிய விசேட சிறப்புத் தேர்ச்சி பெற்ற கொழும்பு பல்கலைக்கழக பட்டதாரியாவார். தனது ஆரம்ப பட்டத்தினை பூர்த்தி செய்ததன் பின்னர் இவர் உதவி விரிவுரையாளராக பொருளாதார விஞ்ஞான கற்கைப்பிரிவில் இணைந்தார். பட்டப்பின்படிப்பு டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் இவர் தாய்லாந்தின் தமாஸட் பல்கலைக்கழகத்தில் பொருளாதார விஞ்ஞானம் பற்றிய கற்கைப்பிரிவில் பொருளாதார விஞ்ஞானம் பற்றிய கலை முதுமாணி கற்கை தொடர்பாக இணைந்தார். பேராசிரியர் அத்துல ரணசிங்க அவர்கள் நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாம் பல்கலைக்கழகத்தின் பொருளதார விஞ்ஞானம் மற்றும் பொருளாதார கோட்பாடுகள் பற்றிய பீடத்தின் பொருளாதார நிபுணராகவும் சேவையாற்றியுள்ளார். பேராசிரியர் ரணசிங்க அவர்கள் தொழிற்பயிற்சி அமைச்சு, கல்வி அமைச்சு, விவசாய அமைச்சு, உள்நாட்டு நிர்வாகம் பற்றிய இலங்கை நிறுவனம் மற்றும் தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனம் (ஐ.சி.டி.ஏ.) போன்ற நிறுவனங்களில் பொருளாதார ஆலோசகராகவும் சேவையாற்றியுள்ளார். “ உயர் விலையுள்ள ஒரு முத்து: இலங்கையின் உயர் கல்வி முறைமைஎன்ற தலைப்பில் ஒரு கற்கை ஆய்வினை சமர்ப்பித்தார்.பேராசிரியர் ரணசிங்க அவர்கள் பொருளாதார விஞ்ஞான கற்கைப்பிரிவின் பிரதான தலைவராக மூன்று வருடகாலம் சேவையாற்றியதுடன் தற்போது இவர் இரண்டாவது பதவிக்காலமாக பீடாதிபதியாக சேவையாற்றுகின்றார். பிஜி பல்கலைக்கழகத்தின் வெளிவாரி விரிவுரையாளராக சேவையாற்றிய இவர் அவுஸ்திரேலியாவின் மெர்க்குரி பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தின் கௌரவ பேராசிரியராகவும் சேவையாற்றியுள்ளார் அதுபோன்று இவர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலொசகராகவும் பொருளதார விற்பன்னராகவும் சேவையாற்றியுள்ளார். இவருடைய பதவிக்காலத்தின் போது இவர் கைத்தொழில் அமைச்சின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிய அபிவிருத்தி வங்கி அனுசரணை வழங்கிய நிர்வாகச் சட்டத்தினை நீக்குகின்ற கருத்தரங்கில் மற்றும் எஸ்.எம்.ஈ. தவள பத்திரத்தினை சட்டமூலம் வரைவதில் ஆலோசகராக விளங்கியுள்ளார். |

| | |
|---|---|
| பேராசிரியர்.எ.எச்.எம் அபேயரத்ன (2012 சனவரி 1 ஆம் திகதி முதல்) | பேராசிரியர் ஏ.எச்.எம். அபேயரத்ன அவர்கள் களனி பல்கலைக்கழகத்தின் வரலாற்றுக் கற்கைப்பிரிவின் பேராசியரியராக இருப்பதுடன் 2005 டிசம்பர் மாதத்தில் அக்கற்கைப்பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டார். 2010 டிசம்பர் மாதம் முதல் இவர் களனிப் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானத்தின் பீடாதிபதியாக சேவையாற்றினார். இவர் களனி பல்கலைக்கழகத்தின் கலைமாணி மற்றும் முதுமாணிப் பட்டங்களை பெற்றுள்ளார். இதற்கு மேலதிகமாக களனி பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானப் பீடத்தின் சிரேஸ்ட மாணவ ஆலோசகராகவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான சங்கத்தின் இணை செயலாளருமாகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.. |

## NCAS இன் நல்ல அரசு

என்.சி.ஏ.எஸ். 2017 ஆம் ஆண்டில் நிகழ்ந்த சகல செயற்பாடுகள் ஊடாக நல்லாட்சி செயற்பாடுகளினை அமுல்படுத்துவதற்கு மற்றும் உயர் தரங்களினை உட்படுத்திக் கொள்வதற்கும் அர்ப்பணிப்புச் செய்துள்ளது. இதன் ஊடாக உரிய நியதிச்சட்ட ஒழுங்குகளுக்கு இணங்கிச் செல்லல். கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்தல் வகை கூறல் மற்றம் அரச நிதியம் தொடர்பாக பொறுப்புக்கள் என்பன மேம்படுத்தப்பட்டுள்ளது.

**1) 1978 ஆம் ஆண்டில் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டம் மற்றும் என்.சி.ஏ.எஸ் கட்டளைச் சட்டத்திற்கு இணங்கிச் செல்லல்**

**<u>நிர்வாக சபையின் நியமனங்கள் மற்றும் உள்ளடக்கம்.</u>**

நிர்வாக சபையின் என்.சீ.எ.எஸ் இன் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பெற்ற அமைப்பாக நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் உள்ளடக்கம் கீழுள்ளவாறாகும்.

01) உயர்கல்வி அமைச்சின் அமைச்சர்-
கௌரவ லக்ஷ்மன் கிரியெல்ல அவர்கள்

02) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழவின் தலைவர்
பேராசிரியர் மொஹான் த.சில்வா அவர்கள்

03) என்.சி.ஏ.எஸ்.முகாமைத்துவ சபையின் தலைவர்
பேராசிரியர் பி.எஸ்.எம்.குணரத்ன அவர்கள்

04) பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் உரிய நிலையான குழுவின் ஊடாக பெயர் குறிப்பிடப்பட்ட மானுடவியல் கற்கை மற்றும் மானுடவியல் சமூக விஞ்ஞான விடயங்களுக்குரிய பீடங்கள் ஆறின் பீடாதிபதிகள்

| | |
|---|---|
| பேராசிரியர் எஸ்.வெவ்வகே | மானிடவியல் கற்கை மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி உறுகுணை பல்கலைக்கழகம். |
| பேராசிரியர் என்.ஞானகுமாரன | பீடாதிபதி கலைப்பீடம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் டபிள்யு ஐ. நாணயக்கார | பீடாதிபதி சட்டபீடம் கொழும்பு பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் ஓ.ஜி.தயாரத்ன பண்டா | பீடாதிபதி கலைப்பீடம் பேராதெனிய பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் எம்.டி.ஏ.எல்.ரணசிங்க | பீடாதிபதி கலைப்பீடம் கொழும்பு பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் எம்.எச்.எம்.எச். அபேயரத்ன | பீடாதிபதி சமூக விஞ்ஞான பீடம் களனி பல்கலைக்கழகம். |

05) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் 4 பேர்

பேராசிரியர் பி.எஸ்.எம்.குணரத்ன உபதலைவர்- பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு
பேராசிரியர் ஜயதேவ உயன்கொட
பேராசிரியர் திருமதி நயனி மெலேகொட
பேராசிரியர் டெனி. அத்தபத்து

சபையின் நடப்பெண் முழு அங்கத்தவர் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றாகும்.

**<u>முகாமைத்துவ சபையின் நியமனங்கள் மற்றும் உள்ளடக்கம்.</u>**

முகாமைத்துவ சபை என்.சி.ஏ.எஸ். இன் முகாமைத்துவ தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பெற்ற அமைப்பாக இருப்பதுடன் அதன் உள்ளடக்கம் பின்வருமாறு

1) சபையின் தலைவராக பணிப்பாளர்- பேராசிரியர் பி.எஸ்.குணரத்ன விரிவுரையாளர்

2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவின் உரிய நிலையான குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்ட மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான விடயங்களுடன் தொடர்புடைய பீடங்கள் ஆறின் பீடாதிபதிகள்

| | |
|---|---|
| பேராசிரியர்.டி.பி.எஸ் சந்த்ரகுமார | பீடாதிபதி மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் ஏ.எச்.எம்.எச். அபேயரத்ன | பீடாதிபதி சமூக விஞ்ஞான பீடம் களனிப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் பி.சி.பக்கீர் ஜௌபர் | பீடாதிபதி கற்கைப்பீடம் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் ஓ.ஜி.தயாரத்ன பண்டா | பீடாதிபதி கலைப்பீடம் பேராதனைப் பல்கலைக்கழகம் |
| திருமதி ஐ. நாணயக்கார | பீடாதிபதி சட்டபீடம் கொழும்பு பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் எம்.டி. ஏ.எல்.ரணசிங்க | பீடாதிபதி கலைப்பீடம் கொழும்பு பல்கலைக்கழகம். |

03) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நியமித்த அங்கத்தவர்கள் நான்கு பேர்.

பேராசிரியர் இந்திரலால் த.சில்வா
பேராசிரியர் ஐ.எம்.கே.லியனகே
பேராசிரியர் ஜே.எஸ்.கே. ஜயக்கொடி
பேராசிரியர் சமந்தி சேனாரத்ன அவர்கள்

சபையின் நடப்பன் முழு அங்கத்தவர் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்று

**2) அரச நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் அரச தாபன விதிக் கோவைக்கு இணங்கிச் செல்லல்**

என்.சீ.ஏ.ஏஸ். அரசின் முழுமையான நிதியினை பெறுகின்ற நியதிச்சட்ட சபையாக இருப்பதுடன் மேற்கொள்ளப்பட்ட நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அரச நிதிப் பிரமாணங்கள் அரச திறைசேரி சுற்றறிக்கைகள் மார்க் மற்றும் வழிகாட்டல்கள் அத்தோடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் போன்றவற்றுக்கு இணங்க அறிக்கையிடப்பட்டுள்ளது.

**3) அரசின் கொள்வனவு ஏற்பாடுகளுக்கு இணங்கி செயல்படுதல்.**

வருடத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட சகல பொருட்கள் மற்றும் சேவைகள் இலங்கை அரசின் கொள்வனவு வழிகாட்டல்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏன்.சி.ஏ.எஸ். முகாமைத்துவ சபையினால் கொள்வனவு ஏற்பாட்டுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அக் குழுவில் சேவையாற்றிய அங்கத்தவர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளனர்.

**<u>கொள்வனவு ஏற்பாட்டுக் குழு (சிறியது)</u>**

| | |
|---|---|
| திருமதி எச்.பி.கேனகம/சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ என்.சி.ஏ.எஸ் | தலைவர் |
| திஜமதி. ஜி.பி. விக்ரமாரச்சி/சிரேஷ்ட உதவிப் பொறுப்பாளர்(பதில்)/ என்.சி.ஏ.எஸ் | அங்கத்தவர் |
| திருமதி.டி.எல்.தர்மசேன/சிரேஷ்டநிதி உதவிப் பொறுப்பாளர் / என்.சி.ஏ.எஸ் | தலைவர் / அங்கத்தவர் |
| திருமதி.எ.எ.எஸ் சிந்தனி | அங்கத்தவர் |
| திருமதி.பி.கே.சாகரிகா /சிரேஷ்ட உதவிக் கணக்காளர் /என்.சீ.எ.எஸ் | அங்கத்தவர் |

**<u>தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு</u>**

திரு.எம்.ஏ.மில்டன் - சிரேஷ்ட உதவி நூலகர் - என்.சீ.எ.எஸ்

திரு.எஸ்.சந்திரசேன - உதவி வலையமைப்பு முகாமையாளர் -என்.சீ.எ.எஸ்

**4) பல்கலைக்கழக தாபன விதிக் கோவை மற்றும் ஆட்சேர்ப்புப் படிமுறை**

சம்பளங்கள் நியமனங்கள் பதவி உயர்வுகள் சம்பள அதிகரிப்பு மற்றும் விடுமுறை உள்ளடங்கலாக சகல பதவியணியின் நடவடிக்கைகள் பல்கலைக்கழக தாபன விதிக் கோவை மற்றும் ஆட்சேர்ப்புச் செய்தல் நவ படிமுறைகளுக்கு இணங்க

மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிதி அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையையும் பதவியணியின் சம்பளம் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் ஆகியன தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

**5) இலங்கை அரச பிரிவு கணக்கிட்டு நியமங்கள் (எஸ்.எல்.பி.ஏஸ்.ஏ.எஸ்) , இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்.கே.ஏ.எஸ்) மற்றும் சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்கள் (ஐ.எப்.ஆர்.எஸ்.எஸ்.)**

என்.சி.ஏ.எஸ்.இன் நிதிக் கூற்றுக்கள் இலங்கையின் அரச பிரிவு கணக்கிட்டு நியமங்களுக்கு (எஸ்.எல்.பி.ஏஸ்.ஏ.எஸ்) இணங்க தயார் செய்யப்பட்டுள்ளது. இலங்கை அரசபிரிவு கணக்கிட்டு நியமங்கள் (எஸ்.எல்.பி.ஏஸ்.ஏ.எஸ்) அறிமுகஞ்செய்யாத கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்.கே.ஏ.எஸ்),சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்கள் என்பன தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

**6) அபேட்சகர்களை தெரிவு செய்தல் மற்றும் பட்டப்பின்படிப்பு புலமைப்பரிசில்களை வழங்குதல் தொடர்பான என்.சீ.ஏ.எஸ். வழிகாட்டல்கள்**

மேற்படி வழிகாட்டல்களுக்கு இணங்க கலாநிதிப் பட்ட புலமைப்பரிசில் தொடர்பாக அபேட்சகர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். முகாமைத்துவ சபையினால் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கற்கைக்கான விடுமுறைகள் தொடர்பான உரித்துக்களினை குறிப்பிடுகின்ற நிலையான நிரந்தர அபேட்சகர்கள் என்.சீ.ஏ.எஸ். இன் பட்டப்பின் படிப்பு புலமைப்பரிசில் தொடர்பாக தகைமை பெறுகின்றனர். அபேட்சகர்களுக்கு முதுமாணி பட்டம் ஒன்று மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற பல்கலைக்கழகத்தினால் அனுமதிக்கப்பட்ட நியமனமொன்றும் இருத்தல் வேண்டும்.

வருடம் ஒன்றுக்கான நிதியளிப்புக்களின் அளவு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் தீர்மானிக்கப்படும்:

- விண்ணப்பதாரிகள் உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் பதிவினை மேற்கொண்டிருப்பின் வருடத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையானது நிறுவனக் கட்டணம் மற்றும் ஆய்வுச்செலவுகளை அடியொட்டியதாய் அமையும்.

- விண்ணப்பதாரிகள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பதிவினை மேற்கொண்டிருப்பின் வருடத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையானது நிறுவனக் கட்டணம் மற்றும் அக் குறித்த நாட்டினுடைய வாழ்க்கைச் செலவு ஆகியவற்றில் தங்கியுள்ளது.இவ் வகையினுள் ஆண்டிற்கான அதிகபட்ச தொகை ரூபா.1.4 மில்லியன் ஆகும்.

## NCAS பதவியணியினர்

<u>பணிப்பாளர்</u>

- பேராசிரியர் பி.எஸ்.எம். குணரத்ன -பணிப்பாளர்
  பதில் பணிப்பாளர்
  உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**<u>முகாமைத்துவ உறுப்பினர்கள்</u>**

- திருமதி.எச்.பி. ஹேனகம
  சிரேஸ்ட உதவிப் பதிவாளர்
  பீ.எஸ்.சி விவசாயம் (சிறப்பு) (PDN) எம்.பி.எ (Wayamba), முதுதத்துவமாணி-MPhil (PDN)

- திருமதி. கயானி விக்ரமாரச்சி
  சிரேஸ்ட உதவிப் பதிவாளர் (பதில்)
  பீ.எஸ்.சி விவசாயம் (ஹொன்ஸ்) (Ruhuna), பொது நிர்வாக முதுமாணி (CMB)

- திருமதி. டி.எல. தர்மசேன
  சிரேஸ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்
  பி.எஸ்.சி ( கணக்கியல்) (SJP), ACA

- எ.எ.எஸ் சிந்தனி
  சிரேஸ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்
  டீடீஆபவ (கணக்கியல்) (KLN), வியாபாரக் கணக்கியலில் முதுமாணி (KLN)

- திரு.எம்.எ மில்டன்
  சிரேஸ்ட உதவி நூலகர்
  பீ.எ (சிறப்பு) (SJP), சமூக விஞ்ஞானங்களில் முதுமாணி
  நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா (KLD)
  Writer-ship மற்றும் தொடர்பாடலில் பட்டப்பின் டிப்ளோமா (SJP)

- திரு. சம்பத் சந்த்ரசேன
  உதவி வலையமைப்பு முகாமையாளர் (தரம்.I)
  தகவல் பாதுகாப்பில் முது விஞ்ஞானமாணி (CMB) , தகவல் தொழில்நுட்பத்தில் டீஜவு (UCSC)
  முகாமைத்துவ டிப்ளோமா (OUSL), தகவல் தொழில்நுட்பத்தில் உயர் டிப்ளோமா (CMB)
  பிரித்தானிய கணினிச் சமூகத்தின் (MBCS) மற்றும் இலங்கை கணினிச் சமூகத்தின் அங்கத்தவர் (MCSSL)

## <u>ஏனைய ஊழியர்கள்</u>

- திரு.எ.எல்.டி பெரேரா ~ நூலக உதசவியாளர் (தரம்~ II)
- திருமதி.யு.டி. விதானகே - கணினிப் பிரயோக உதவியாளர் (தரம் – III)
- திர.கெ.எம்.ஜி.ஜி. தனுஸ்க - புத்தக வைப்பாளர் (தரம்- II)
- திருமதி. பி.எ.எச..இ தேவப்பிரியா - கணினிப் பிரயோக உதவியாளர் (தரம் – III)
- திரு.ஆர்.கெ.பி.ரத்நாயக்க - கணினிப் பிரயோக உதவியாளர் (தரம் – III)
- திரு.வினோதித ஹெட்டியாரச்சி - கணினிப் பிரயோக உதவியாளர்(தரம் – III)
- திரு.ஆர்.ஜி.எம் சஞ்சீவ - ஓட்டுனர்
- திரு.டபிள்யு.எ.டி.எஸ். வீரகொடி - அலுவலக உதவியாளர்
- திரு.பி.பி.கெ பாலசுர்ய - அலுவலக உதவியாளர்
- திரு.எச்.எஸ்.பி. கருணாரத்ன - அலுவலக உதவியாளர்

| தொடர். இல | பதவி | | தரம் | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | 31.12.2017 ஆந் திகதிக்கு நடைமுறையில் உள்ள பதவியணியினர் |
|---|---|---|---|---|---|---|
| **சிரேஸ்ட மட்டம்** | | | | | | |
| 1 | பணிப்பாளர் | | | | 1 | 1 |
| 2 | சிரேஸ்ட உதவி நூலகர் | | II | | 1 | 1 |
| 3 | சிரேஸ்ட உதவிப் பதிவாளர் | | | | 1 | 1 |
| 4 | சிரேஸ்ட உதவி நிதிப் பொறுப்பாளர் | | | | 1 | 1 |
| **மூன்றாம் நிலை மட்டம்** | | | | | | |
| 5 | உதவி வலையமைப்பு முகாமையாளர் | | II | | 1 | 1 |
| **இரண்டாம் நிலை மட்டம்** | | | | | | |
| 6 | கணினிப் பிரயோக உதவியாளர் | | III | | 4 | 3 |
| 7 | புத்தக வைப்பாளர் | | II | | 1 | 1 |
| 8 | நூலக உதவியாளர் | | III | | 1 | 1 |
| **முதனிலை மட்டம்** | | | | | | |
| 9 | ஓட்டுனர் | | II | | 1 | 1 |
| 10 | தொழிலாளி | | III | | 2 | 1 |

## செயலமர்வு - பாடநெறி - சமர்ப்பிப்புக்கள்

என்.சீ.ஏ.எஸ். இனால் 2017 ஆம் ஆண்டில் நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புக்கள், பாடநெறிகள் , மற்றும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய விபரங்கள் கீழ்வருமாறு:

அட்டவணை 1: 2017 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட செயலமர்வுகள் / பாடநெறிகள் / சமர்ப்பிப்புக்கள் பற்றிய சுருக்கம்.

| இல | சமர்ப்பிப்புக்கள் | நடாத்தப்பட்ட திகதி | இலக்குக் குழு | பங்குபற்றல்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | "ஜேர்மனியில் உயர் கல்விக்கான வாய்ப்புக்கள் குறித்த கருத்தரங்கு'' திரு. சமிந்த ஹெட்டியாரச்சி | 2017 திசெம்பர் 12 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | பல்கலைக்கழக கல்விசார் மற்றும் நிர்வாக ஆளணியினர் | 50 | பூர்த்தி செய்யப்பட்டது |
| இல | பாடநெறிகள் | நடாத்தப்பட்ட திகதி | இலக்குக் குழு | பங்குபற்றல்கள் | குறிப்பு |
| 2. | "புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுக்கான எஸ்.பி.எஸ்.எஸ். இற்கான அறிமுகம் பற்றிய சான்றிதழ் பாடநெறி கலாநிதி நிஷாரா பெர்னாந்து மற்றும் எஸ்.சந்திரசேன | என்.ஸி.எ.எஸ் கேட்போர் கூடத்தில் 2017 ஜனவரி 8,15,22,29 | பல்கலைக்கழக கல்விசார் மற்றும் நிர்வாக ஆளணியினர் | 10 | பூர்த்தி செய்யப்பட்டது |
| 3. | "புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுக்கான எஸ்.பி.எஸ்.எஸ். இற்கான அறிமுகம் பற்றிய சான்றிதழ் பாடநெறி கலாநிதி நிஷாரா பெர்னாந்து மற்றும் எஸ்.சந்திரசேன | என்.ஸி.எ.எஸ் கேட்போர் கூடத்தில் 2017 மார்ச் 12,19,26,மற்றும் ஏப்ரில் 02 | பல்கலைக்கழக கல்விசார் மற்றும் நிர்வாக ஆளணியினர் | 12 | பூர்த்தி செய்யப்பட்டது |
| 4. | "புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுக்கான எஸ்.பி.எஸ்.எஸ். இற்கான அறிமுகம் பற்றிய சான்றிதழ் பாடநெறி கலாநிதி நிஷாரா பெர்னாந்து மற்றும் எஸ்.சந்திரசேன | என்.ஸி.எ.எஸ் கேட்போர் கூடத்தில் 2017 மே 4,14,21,28 | பல்கலைக்கழக கல்விசார் மற்றும் நிர்வாக ஆளணியினர் | 11 | பூர்த்தி செய்யப்பட்டது |
| 5. | "புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுக்கான எஸ்.பி.எஸ்.எஸ். இற்கான அறிமுகம் பற்றிய சான்றிதழ் பாடநெறி கலாநிதி நிஷாரா பெர்னாந்து மற்றும் எஸ்.சந்திரசேன | என்.ஸி.எ.எஸ் கேட்போர் கூடத்தில் 2017 ஜுலை 23,30 மற்றும் ஆகஸ்ட் 3,13 | பல்கலைக்கழக கல்விசார் மற்றும் நிர்வாக ஆளணியினர் | 6 | பூர்த்தி செய்யப்பட்டது |
| 6. | "புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுக்கான எஸ்.பி.எஸ்.எஸ். இற்கான அறிமுகம் பற்றிய சான்றிதழ் பாடநெறி கலாநிதி நிஷாரா பெர்னாந்து மற்றும் எஸ்.சந்திரசேன | என்.ஸி.எ.எஸ் கேட்போர் கூடத்தில் 2017 நவம்பர் 5,12,18,19 | பல்கலைக்கழக கல்விசார் மற்றும் நிர்வாக ஆளணியினர் | 11 | பூர்த்தி செய்யப்பட்டது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | ‘நிர்வாக எழுத்துத் திறன் பற்றிய குறுகிய கால பாடநெறி’ | என்.ஸி.எ.எஸ் கேட்போர் கூடத்தில் 2017 மே 19 மற்றும் ஜுன் 02 | பல்கலைக்கழக கல்விசார் ஆளணியினர் | 23 | பூர்த்தி செய்யப்பட்டது |
| **இல** | **செயலமர்வுகள்** | **நடாத்தப்பட்ட திகதி** | **இலக்குக் குழு** | **பங்குபற்றல்கள்** | **குறிப்பு** |
| 8. | ‘AMOSபற்றிய செயலமர்வு’ கலாநிதி.நிரக்ஷி கலஹிடியாவே | என்.ஸி.எ.எஸ் கேட்போர் கூடத்தில் 2017 ஏப்ரில் 4,5 | பல்கலைக்கழக கல்விசார் மற்றும் நிர்வாக ஆளணியினர் | 15 | பூர்த்தி செய்யப்பட்டது |
| 9. | ‘AMOSபற்றிய செயலமர்வு’ கலாநிதி.நிரக்ஷி கலஹிடியாவே | என்.ஸி.எ.எஸ் கேட்போர் கூடத்தில் 2017 ஏப்ரில் 25,26 | பல்கலைக்கழக கல்விசார் மற்றும் நிர்வாக ஆளணியினர் | 9 | பூர்த்தி செய்யப்பட்டது |
| 10. | ‘AMOSபற்றிய செயலமர்வு’ கலாநிதி.நிரக்ஷி கலஹிடியாவே | என்.ஸி.எ.எஸ் கேட்போர் கூடத்தில் 2017 செப்டெம்பர் 12,13 | பல்கலைக்கழக கல்விசார் மற்றும் நிர்வாக ஆளணியினர் | 10 | பூர்த்தி செய்யப்பட்டது |
| 11. | வியாபார நிர்வாக எழுத்துபற்றிய செயலமர்வு திரு.கெ.டி.எஸ்.என் விஜேஸிறி | என்.ஸி.எ.எஸ் கேட்போர் கூடத்தில் 2017 ஒக்டோபர் 12,13 | பல்கலைக்கழக நிர்வாக ஆளணியினர் | 30 | பூர்த்தி செய்யப்பட்டது |
| 12. | பல்கலைக்கழக ஊழியர்களின் ஒழுக்காற்று படிமுழற தொடர்பான செயலமர்வு திரு. என் செல்வகுமாரன் | என்.ஸி.எ.எஸ் கேட்போர் கூடத்தில் 2017 நவம்பர் 09 | பல்கலைக்கழக நிர்வாக ஆளணியினர் | 30 | பூர்த்தி செய்யப்பட்டது |
| 13. | மைக்ரோசொப்ட் எக்ஸல் உயர் செயலமர்வு திரு.சுமுது சேகரகே | என்.ஸி.எ.எஸ் கேட்போர் கூடத்தில் 2017 மார்ச் 23,24 | கணினிப் பிரயோக உதவியாளர்கள் மற்றும் புத்தக வைப்பாளர்கள் | 22 | பூர்த்தி செய்யப்பட்டது |
| 14. | மைக்ரோசொப்ட் எக்ஸல் உயர் செயலமர்வு திரு.சுமுது சேகரகே | என்.ஸி.எ.எஸ் கேட்போர் கூடத்தில் 2017 நவம்பர் 23,24 | கணினிப் பிரயோக உதவியாளர்கள் மற்றும் புத்தக வைப்பாளர்கள் | 24 | பூர்த்தி செய்யப்பட்டது |
| 15. | தொழில்நுட்ப பாதுகாப்பு தொடர்பிலான செயலமர்வு திரு.சம்பத் சந்த்ரசேன | என்.ஸி.எ.எஸ் கேட்போர் கூடத்தில் 2017 நவம்பர் 08 | நிர்வாக ஆளணியினர் | 11 | பூர்த்தி செய்யப்பட்டது |

## ‘ஜேர்மனியில் உயர் கல்விக்கான வாய்ப்புகள்’ தொடர்பிலான கருத்தரங்கு

என்.சி.எ.எஸ் ஆனது பல்கலைக்ககழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் மற்றும் ஜெர்மன் தூதுவராலயத்துடன் இணைந்து இணைந்து கொழும்பில் ‘ஜேர்மனியில் உயர் கல்விக்கான வாய்ப்புக்கள்’- திரு சமிந்த ஹெட்டியாரச்சி எனப்படும் அந்நாட்டுப் பட்டதாரி, மற்றும் கல்வியியலாளர் உட்பட இலங்கைக்கான முகாமைத்துவ ஆலோசகரினால் 2017 திசெம்பர் 12 ஆந் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில் கருத்தரங்கொன்று இடம்பெற்றது. இதில் 50 இற்கும் மேற்பட்ட கல்வி சார் மற்றும் நிர்வாக ஆளணியினர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

## புள்ளிவிபரவியல் ரீதியிலான பகுப்பாய்வுக்கான எஸ்.பி.எஸ்.எஸ். அறிமுகம் செய்தல் பற்றிய சான்றிதழ் பாடநெறி

மானுடவியல் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம் புள்ளிவிபரவியல் ரீதியான பகுப்பாய்வு தொடர்பான எஸ்.பி.எஸ்.எஸ். அறிமுகம் செய்தல் பற்றிய சான்றிதழ் பாடநெறியினை 2013 சனவரி முதல் வார இறுதி நாட்களில் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு பாடநெறி தொடர்பாகவும் 15 பேர் சேர்க்கப்பட்டனர். கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான திணைக்களத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நிஷாரா பெர்னான்து வளவாளர் ஊடாக இந்த பாடநெறி நடாத்தப்பட்டதுடன் என்.சி.எ.எஸ் நிறுவனத்தின் உதவி வலையமைப்பு முகாமையாளர் திரு. சம்பத் சந்திரசேன அவர்கள் உதவி விரிவுரையாளராக இதில் கடமையாற்றினார். 2017 ஆம் ஆண்டின் போது என்.சி.எ.எஸ் இனால் 4 கற்கை நெறிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பல்கலைக்கழக கட்டமைப்பில் உள்ள 39 கல்விசார் ஊழியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இப் பாடநெறியில் கலந்து சிறப்பித்தனர்.

## அளவையியல் ரீதியிலான ஆய்வுக்குரிய கட்டமைப்பு ரீதியிலான மாதிரி (AMOS உடன்) குறித்த செயலமர்வு

மானுடவியல் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம் அளவையியல் ரீதியிலான ஆய்வுக்குரிய கட்டமைப்பு ரீதியிலான மாதிரி (AMOS உடன்) 2013 சனவரி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடநெறி தொடர்பாகவும் 12 பேர் சேர்க்கப்பட்டனர். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்தவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நிலக்சி கலஹிடியாவெ மற்றும் பேராசிரியர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத் திணைக்களத்தின் பேராசிரியர். ஜெ.எ.எஸ்.கெ ஜயக்கொடி அகிய வளவாளர்களினால் இக் குறித்த செயலமமர்வு நடாத்தப்பட்டதுடன்
2017 ஆம் ஆண்டின் போது 4 கற்கை நெறிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பல்கலைக்கழக கட்டமைப்பில் உள்ள 39 கல்விசார் ஊழியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இப் பாடநெறியில் கலந்த சிறப்பித்தனர். உதவி வலையமைப்பு முகாமையாளர் திரு. சம்பத் சந்திரசேன அவர்களினால் இப் பாடநெறிகள் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டன. 2017 ஆம் ஆண்டின் போது என்.சி.எ.எஸ் இனால் 3 கற்கை நெறிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பல்கலைக்கழக கட்டமைப்பில் உள்ள 34 கல்விசார் ஊழியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இப் பாடநெறியில் கலந்து சிறப்பித்தனர்.

## வியாபார மற்றும் நிர்வாக எழுத்துத் திறன் பற்றிய செயலமர்வு

பல்கலைக்கழக முறைமையில் உள்ள நிர்வாக ஆனணியினருக்காக வேண்டி உயர்கல்விக்கான தேசிய நிலையமானது வியாபார மற்றும் நிர்வாக எழுத்துத் திறன் முறை குறித்து செயலமர்வொன்றினை 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 மற்றும் 13 ஆந் திகதிகளில் உயர்கல்விக்கான தேசிய நிலையத்தில் ஏற்பாடு செய்தது. இந்தச் செயலமர்வானது பிரதானமாக நிர்வாக ஆளணியினருக்கு அவர்களின் ஆங்கில மொழித்

எழுத்தாற்றலை முன்னேற்றிக் கொள்ளவும் மற்றும் அவர்களது கடமைகளை நிறைவேற்றுவதற்கான கட்டுரை நுட்பத் தேர்ச்சியினை வளர்த்துக் கொள்வதற்கான பயிற்சியினை வழங்குதலை நோக்காகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.இதன் வளவாளராக NIBM இனுடைய சிரேஷ்ட ஆலோசகர் திரு.எஸ் விஜேயஸிரி அவர்கள் கலந்து சிறப்பித்தார்.இப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு பல்கலைக்கழக முறைமையில் உள்ள கல்விசார் மற்றும் நிர்வாக ஆளணியிடமிருந்து கிட்டத்தட்ட 30 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## மைக்ரோசொப்ட் உயர் எக்ஸெல் தொடர்பான செயலமர்வு

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர் கற்கைக்கான தேசிய நிலையமானது எம்.எஸ். எக்செல் 2010 உயர் சான்றிதழ் கற்கைநெறியினை 2014 ஆகஸ்ட் 04 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமான முறையில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.குறைந்த காலப்பிரிவில் வினைத்திறனான முறையில் வேலையாற்றுவதனை இலக்காகக் கொண்டு மற்றும் ஏராளமான புதிய சமன்பாடுகள் மற்றும் சூத்திரங்களைக் கொண்டிருப்பதால் என்.சி.எ.எஸ் ஆனது எம்.எஸ் எக்செல் 2010 இனை எம்.எஸ். எக்செல் 2013 இற்கு மேம்படுத்தியுள்ளது. இவ் வருடத்தில் என்.சி.எ.எஸ் ஆனது செயலமர்வொன்றினை 2017 நவம்பர் 23 மற்றும் 24 ஆந் திகதிகளில் நடத்தியதுடன் பல்கலைக்கழக முறைமையில் உள்ள 22 கல்வி சாரா ஊழியர்கள் இதில் கலந்து கொண்டுள்ளனர். இப் பாடநெறியின் பிரதான நோக்கமாவது உற்பத்தித் தஜறனை அதிகரித்தல் மற்றும் தொழில் வினைத்திறனை மேம்படுத்துவது ஆகும்.

### தகவல் பாதுகாப்பு தொடர்பிலான செயலமர்வு

பல்கலைக்கழக மற்றும் வேறு முறைமைகளில் உள்ள நிர்வாக ஆளணியினருக்கான தகவல் பாதுகாப்புச் செயலமர்வொன்றினை என்.சி.எ.எஸ் ஆனது 2017 ஆம் ஆண்டில் புதிதாக ஆரம்பித்தது.இதன் வளவாளராக என்.சி.எ.எஸ் நிறுவனத்தின் உதவி வரைலயமைப்பு முகாமையாளர் திரு சம்பத் சந்த்ரசேன அவர்கள் பங்கேற்றார். 2017 நவம்பர் 08 ஆந் திகதி இடம்பெற்ற இதன் முதலாவது செயலமர்வின் போது நிர்வாகத் தரப்பினரில் இருந்து மொத்தமாக 11 பேர் கலந்து கொண்டனர்.

### பல்கலைக்கழக ஆளணியினருக்கான ஒழுக்காற்று நடைமுறைகள் தொடர்பிலான செயலமர்வு

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர் கற்கைக்கான தேசிய நிலையமானது பல்கலைக்கழக ஆளணியினரின் ஒழுக்காற்று வழிமுறைகளைக் கருத்திற் கொண்டு 2017 நவம்பர் 09 ஆந் திகதி என்.சி.எ.எஸ் இல் அது தொடர்பிலான செயலமர்வொன்றினை ஆரம்பித்தது. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் முன்னால் பீடாதிதபதியும் சிரேஸ்ட விரிவுரையாளருமாகிய திரு. என் செல்வகுமாரன் அவர்களினால் இச் செயலமர்வானது நடாத்தப்பட்டதுடன் 30 நிர்வாக ஆளணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர்.

### புலமைசார் எழுத்துத் திறன் (Academic writing) குறித்த குறுகிய கற்கைநெறி

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர் கற்கைக்கான தேசிய நிலையமானது புலமை சார் எழுத்துத் திறன் தொடர்பிலான குறுகியகால கற்கைநெறியினை பல்கலைக்கழக முறைமையில் உள்ள கல்வி சார் ஆளணியினருக்காக வேண்டி 2017 மே மாதம் 19 ஆந் திகதி மற்றும் ஜூன் மாதம் 02 ஆந் திகதிகளில் என்.சி.எ.எஸ் இல் ஒழுங்குபடுத்தியிருந்தது.
இக் கற்கைநெறியின் நோக்கங்களை இரண்டாக வகைப்படுத்தலாம்:

i. பங்கேற்பாளர்கள் வினைத்திறனான முறையில் புலமை சார் எழுத்தாற்றலை மேற்கொள்வதற்குரிய அமைப்பில் புலமைசார் எழுத்தியலுடன் தொடர்புடைய அறிவு மற்றும் திறமைகளை வழங்குதல்.

ii. பங்கேற்பாளர்களுக்கு மத்தியில் நன்றாக எழுதுவதற்குரிய உட் கிளர்ச்சியினை மற்றும் உத்வேகத்தினை தூண்டும் விதத்திலான மனநிலைப்பாட்டினை அபிவிருத்தி செய்தல்.

இக் கற்கைநெறியானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர். மங்கல பொன்சேக மற்றும் அதே பல்கலைக்கழகத்தின் கலாநிதி. எ.ஆர்.அஜ்வாத் அவர்களின் ஒத்துழைப்புடனும் நடாத்தப்பட்டது. அதனடிப்படையில் இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு பல்கலைக்கழக முறைமையிலிருந்து 23 கல்வியியலாளர்கள் கலந்து கொண்டனர்.

## <u>வருடாந்த ஆராய்ச்சி கலந்துரையாடல் மாநாடு - 2017 (2017 திசெம்பர் 20)</u>

என்.ஸி.எ.எஸ் ஆனது அதனுடைய 04 ஆவது வருடாந்த ஆராய்ச்சிக் கலந்துரையாடலை 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி ஹில்டன் கொழும்பு ரெசிடென்சீசில் (ஜெய்க் ஹில்டன்) வெற்றிகரமாக நடாத்தி முடித்தது.பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர். மொஹான் த சில்வா அவர்கள் இதனுடைய ஆரம்ப நிகழ்வின் போதான சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட அதே வேளை தெற்காசியப் பல்கலைக்கழகம், புதுடில்லி இனுடைய உப தலைவர் பேராசிரியர் சசன்க பெரேரா அவர்கள் ஆரம்ப நிகழ்வில் 'சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மனித நேயத்தினை மீட்டெடுத்தல்: தெற்காசியாவிலிருந்து குறிப்புக்கள்' குறித்த பிரதான பேச்சாளராகக் கலந்து சிறப்பித்தார். NCAS இன் ஆய்வுக்கட்டுரை கோரல் அறிவித்தலுக்கான பதிளளிப்பின் போது NCAS ஆனது 96 ஆய்வுக்கட்டுரைகளை (விரிவான ஆய்வுச்சுருக்கங்களை) பெற்றதுடன் அதில் 62 ஆய்வுக் கட்டுரைகளானவை ஆரம்பத்திலேயே மாநாட்டிற்காக வேண்டி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருப்பினும், மாநாட்டிற்றகாக வேண்டி பதிவு செய்திருந்த எழுத்தாளர்கள் இணை எழுத்தாளர்கள் உட்பட 59 பேர்களாவர். ஏற்றுக் கொள்ளப்பட்ட எண்ணிக்கையில், 48 ஆய்வுக் கட்டுரைகள் பின்வரும் தொனிப்பொருள்களில் 4 சமாந்திர பிரிவுகளில் இருந்து ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்டது.

**நிகழ்வின் தொனிப்பொருள்கள்**

- முயற்சியாண்மை மற்றும் சிறிய வியாபாரங்கள்
- மொழியியல் மற்றும் மொழிக் கற்கைகள்
- சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவம்
- குடியியல் மற்றும் சுகாதாரக் கல்வி
- சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்கள்
- கணக்கியல் மற்றும் நிதியியல்
- பொருளியல்
- மனிதவள முகாமைத்துவம்
- முகாமைத்தவ மூலோபாயம்
- நூலக மற்றும் தகவல் விஞ்ஞானங்கள்
- சட்டம்இ அரசியல் விஞ்ஞானம் மற்றும் சர்வதேச உறவுகள்
- உளவியல், உளவள ஆலோசனை மற்றும் பௌத்த தத்தவம்
- இலக்கியம் மற்றும் அரங்கேற்றற் கலை

NCAS இன் 04 ஆவது வருடாந்த அராய்ச்சி மாநாட்டின் சில படங்கள்










## என்.சி.ஏ.எஸ். இன் தகவல் தொடர்பாடல் வளங்கள்

என்.சி.ஏ.எஸ். இல் 20 கணணிகள் மற்றும் பல் ஊடக வசதிகளுடன் கூடிய கணணிக் கூடமொன்று உள்ளது. மற்றும் பல்கலைக்கழக கற்கையில் நிறைவேற்று அலுவலர் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு கணிணி பிரயோகம் எஸ்.பி.எஸ்.எஸ். இனை பயன்படுத்த, தரவு பகுப்பாய்வுக்கட்டமைப்பு ரீதியான தீர்த்தல் மாதிரி தொடர்பாக ஏ.எம்.ஓ.எஸ்.போதியளவான ஆராய்ச்சி தொடர்பாக ஈ.வீவ்ஸ் போதியளவிலான ஆராய்ச்சித் தகவல் பாதுகாப்புக்காக என்.வி.ஐ.ஒ போன்றன பற்றி பயிற்சியளித்தல் இந்த ஆய்வு கூடத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.பிரதான முகாமை தகவல்களின் மதிப்பீடு மற்றும் வழங்கல் தொடர்பாக பிரதான முகாமைத்துவ தரவு மென்பொருள் பயன்படுத்தப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப பிரிவு மேற்கொண்ட செயற்பாடுகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

- நிறுவனம் தொடர்பாக தொழில்நுட்ப விபரங்கள் செயல்திட்ட முன்மொழிவுகள் மற்றும் தொழில்நுட்ப அறிக்கையினை கட்டியெழுப்புதல்.

- வின்டோஸ் சேவை வழங்குனர் மற்றும் லினக்ஸ் சேவை வழங்குனர் மற்றும் றவுட்டர் போன்ற தொடர்புடைய உபகரணங்களினை பொருத்துதல் செயல்படுத்துதல் மற்றும் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு

- சேவை வழங்குனர் மற்றும் வேலைத்தளம் தொடர்பாக மென்பொருள்களினை நிறுவுதல் மற்றும் பிரதி எடுத்தல் செயல்படுத்தல்

- சேவையக முகாமைத்துவம்-அச்சு மற்றும் கோப்புப் பரிமாறி, அச்சு சேவையகம்,அடிப்படை செயற்பாட்டு முறைமை நியமங்கள், இயக்கு முறைமை, தரமுயர்த்தல் மற்றும் பராமரிப்பு, காப்பு நகல் / மீள்நிலைப்படுத்தல் சேவையகம், வன்பொருள் உருவமைப்பு போன்ற சேவையக வடிவமைப்பும் செயற்படுத்தலும்

- கண்காணித்தல்- கண்காணித்தல் மற்றும் பகுப்பாய்வுக் கருவிகள் தொடர்பான விதப்புரைகளைத் தயாரித்தல். கண்காணிக்கும் கருவிகளைத் தயாரித்தலும் செயற்படுத்தலும் காப்பு நகல் வலையமைப்பு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தலும் செயற்படுத்தலும்.

- தகவல் பாதுகாப்புத் தேவைப்பாடுகளை செயற்படுத்துதல், அனுசரனையும் பராமரிப்பும், பாதுகாப்புச் சீர்படுத்தல்கள், இயக்க முறைத் தரமுயரத்தல் உட்பட செயலாற்றல் முறைமைகள்

- மைய நச்சு நிரல்-எதிர்ப்பு முகாமைப் பிரயோக பராமரிப்பு, கெஸ்பேர்ஸ்கி நச்சு நிரல்-எதிர்ப்பு மென்பொருள்

- தரமுயர்த்தல்,சீர்படுத்தல்களை இடுதல், புதிய பிரயோகங்கள் மற்றும் கருவிகளை விதப்புரை செய்தல்

- விண்டொஸ் மற்றும் லினக்ஸ் அடிப்படையிலான உட்கட்டடைமப்புத் தீர்வுகளை வடிவமைப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் என வியாபார தேவைப்பாடுகளை இணங்கானுதல், எதிர்கால முறைமையைத் தரமுயரத்தலும் மதிப்பீடு செய்தலும்.

- நிறுவனத்திற்கென எப்பொழுதும் இணையத்தளம்(www.ncas.lk) இணையம், நூலகம் மற்றும் தரவுத்தளம் போன்றவற்றை விருத்தி செய்தல்
- www..ncas.ac.lk என்ற டொமைன் (Domain) மற்றும் மின்னஞ்சல் முறைமையினை கூகுள் கிளவுட் சேவையுடன் (Google cloud services) இணைத்துப் பராமரிப்புச் செய்தல்.

- சகல கல்விசார் எண்ணிக்கை சார் மற்றும் பண்பு சார் தகவல் பகுப்பாய்வு கற்கைநெறிகள் மற்றும் செயலமர்வுகான எஸ்.பி.எஸ்.எஸ், எ.எம்.ஒ.எஸ், என்.வி.ஐ.வி.ஒ, இ வீவ்ஸ் (SPSS AMOS NVIVO EVIEWS) போன்றன.


## புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம்

திறைசேறி புதிய கலாநிதிப் பட்ட புலமைப்பரிசில் மற்றும் 2008-2017 வரை புலமைப்பரிசில் பெற்ற NCAS புலமைப்பரிசில் பெறுநர்களின் 1ஆம் 2 ஆம் மற்றும் 3ஆம் ஆண்டு கல்வி நடவடிக்கைக்காக 59.9 மில்லியன் ரூபாவினைக் கொடையாக அளித்துள்ளது.மீளாய்வாண்டில் NCAS இனால் பல்கலைக்கழகக் கல்வியாளர்கள் 47 பேருக்கு அவர்களது பட்டப்பின் கற்கைகளுக்கான கொடையாக நிதியளிக்கப்பட்டிருந்ததுடன் 2017 வரவுசெலவுத் திட்டத்தில் நேர்முகத் தேர்வு செய்யப்பட்டு இன்னும் தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்காதவர்களுக்காக 28 மானியங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டின் இறுதியில் வெவ்வேறு பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்களுக்காகத் தெரிவு செய்யப்பட்ட 465 கல்வியாளர்களுக்காக NCAS குறைநிரப்புத் தொகையொன்றை கொடையாக அளித்துள்ளது. புலமைப்பரிசில் பெற்ற 284 பேர் தம் பட்டப்பின் கற்கையினை நிறைவு செய்துள்ளனர்.முகாமைத்துவம், மொழிக்கற்கை, சமூகவியல்,பொருளியல், வெகுஜன ஊடகம்,நுண்கலைகள், சுதேச மருத்துவம் மற்றும் இது போன்ற வேறு பாடங்களுக்கும் கொடை மானியங்கள் அளிக்கப்பட்டுள்ளன.2017 ஆம் ஆண்டில் முகாமைத்துவத் துறைக்கே அதிக கொடைகள் அளிக்கப்பட்டுள்ளன.

**துறைசார் அடிப்படையில் மானியம் பெறுபவர்களின் ஒதுக்கீடு 2015/2017**

| | | 2005 | 2006 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | மொத்தம் 2005/2017 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மானுடவியல்/ நுண்கலைகள் | 6 | 15 | 6 | 9 | 9 | 8 | 5 | 10 | 6 | 4 | 5 | 3 | 86 |
| 2 | சமூக விஞ்ஞானங்கள்/ வரலாறு/ தொல்பொருளியல்/ நூலக விஞ்ஞானம் | 22 | 12 | 9 | 13 | 11 | 5 | 6 | 5 | 5 | 12 | 2 | 3 | 105 |
| 3 | கல்வி | 3 | | 2 | | 3 | | 1 | | 2 | | 2 | | 13 |
| 4 | சட்டம் | 1 | 1 | | 1 | | 1 | | | 1 | 6 | | 2 | 13 |
| 5 | முகாமைத்துவம் | 9 | 5 | 3 | 10 | 8 | 17 | 8 | 17 | 14 | 14 | 12 | 4 | 121 |
| 6 | வேறு | 4 | 5 | 1 | 1 | 2 | 6 | 6 | 6 | 12 | 8 | 2 | 3 | 56 |
| | **மொத்தம்** | 50 | 45 | 28 | 43 | 39 | 41 | 30 | 42 | 45 | 44 | 23 | 15 | 445 |




துறைசார் அடிப்படையில் மானியம் பெறுபவர்களின் ஒதுக்கீடு 2015/2017
மானுடவியல்/ நுண்கலைகள
சமூக விஞ்ஞானங்கள்/ வரலாறு/ தொல்பொருளியல்/ நூலக விஞ்ஞானம
கல்வி
சட்டம்
முகாமைத்துவம்
வேறு
0
5
10
15
20
25
மானியம் பெறுநர்கள்
2005
2006
2008
2009
2010
2011
2012
2013
2014
2015
2016
2017
ஆண்டு

## PHD கலாநிதிப் புலமைப்பரிசில் தொடர்பான திறைசேறி நிதிப் பயன்பாடு

**நன்கொடையளித்த நிதியம் (2008-2017)**


| வருடம் | நன்கொடையளித்த நிதியம் தொகை ருபாயில். | மேலதிக நிதியம் தொகை ரூபாயில். |
|---|---|---|
| 2008 | 23,589,220.00 | |
| 2009 | 39,665,659.00 | |
| 2010 | 39,364,958.79 | |
| 2011 | 60,000,000.00 | 8,720,000.00 |
| 2012 | 45,500,000.00 | 16,780,000.00 |
| 2013 | 83,035,817.00 | |
| 2014 | 95,396,122.00 | |
| 2015 | 83,598,118.69 | |
| 2016 | 68,640,031.50 | |
| 2017 | 59,977,493.16 | |



## இலங்கைப் பல்கலைக்கழகங்களில் சேவையாற்றுகின்ற Phd கலாநிதிக் கல்வியலாளர்களின் பரம்பல்

## (என்.சி.எ.எஸ் இனால் வழங்கப்பட்ட மானியங்கள் 2005-2017)

| இல | சேவையாற்றுகின்ற பல்கலைக்கழகம் | 2005 | 2006 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கை | 1 | 1 | 1 | 3 | | 4 | 3 | 2 | 2 | 1 | 1 | | **19** |
| 2 | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | 2 | 2 | | 3 | 5 | | 1 | | 5 | | 2 | 1 | **21** |
| 3 | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 5 | 1 | 2 | 2 | 4 | 3 | 1 | 4 | 3 | 4 | 2 | | **31** |
| 4 | இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | 1 | | | | | 2 | | 4 | | | | | **7** |
| 5 | கொழும்புப் பல்கலைக்கழகம் | 11 | 9 | 6 | 4 | 3 | 5 | 1 | 3 | 6 | 12 | 4 | 1 | **65** |
| 6 | பேராதனைப் பல்கலைக்கழகம் | 10 | 12 | 7 | 5 | 2 | 1 | 2 | 2 | 3 | 5 | 1 | 3 | **53** |
| 7 | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 2 | 2 | | | 2 | 2 | 2 | 1 | 1 | | | | **12** |
| 8 | களனிப் பல்கலைக்கழகம் | 6 | 7 | 7 | 8 | 6 | 9 | 3 | 6 | 5 | 10 | 5 | 2 | **74** |
| 9 | உறுகுணை பல்கலைக்கழகம் | 3 | 1 | 2 | 11 | 5 | 3 | 1 | | | 2 | 2 | 1 | **31** |
| 10 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 8 | 5 | 1 | 5 | 8 | 6 | 5 | 14 | 7 | 3 | 1 | 3 | **66** |
| 11 | இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் | | 2 | | 1 | 1 | 1 | 2 | | 3 | | 1 | 1 | **12** |
| 12 | மொறட்டுவ பல்கலைக்கழகம் | | | | | | 2 | | | | | 4 | | **6** |
| 13 | கட்புல அரங்கேற்றக் கலைப் பல்கலைக்கழகம் | | | 2 | 2 | | | 2 | 1 | 2 | | | | **9** |
| 14 | இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | | | | | 1 | 1 | | | 1 | | | | **3** |
| 15 | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் | | | | | | | 1 | 1 | 1 | 3 | | 1 | **7** |
| 16 | ஸ்ரீபாளி வளாகம் | | | | | | | 1 | 1 | | | | | **2** |
| 17 | வவுனியா வளாகம் | 1 | 1 | | | | 2 | | | | | | | **4** |
| 18 | கம்பஹா விக்ரமாரச்சி ஆயர்வேத நிறுவகம் | | 2 | | | | | | | 1 | | | | **3** |
| 19 | சுதேச மருத்துவ நிறுவகம் | | | | | 1 | | 3 | 1 | 1 | 2 | | | **8** |
| 20 | திருகோணமலை வளாகம் | | | | | | | | 1 | | | | 1 | **2** |
| 21 | பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் | | | | | | | | | 1 | | | | **1** |
| 22 | ஆங்கிலப் பட்டப் பின் கற்கை நிறுவகம் | | | | | | | | | 1 | | | | **1** |
| 23 | மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் உயர் கற்கை நிறுவகம் | | | | | | | | | 1 | 1 | | | **2** |
| 24 | சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம் | | | | | 1 | | 1 | 1 | 1 | | | | **4** |
| 25 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | | | | | | | 1 | | | 1 | | | **2** |
| | மொத்தம் | 50 | 45 | 28 | 44 | 39 | 41 | 30 | 42 | 45 | 44 | 23 | 14 | **445** |


DISTRIBUTION OF SCHOLARS EMPLOYED IN SRI LANKAN UNIVERSITIES
EUSL
OUSL
SUSL
SEUSL
UOC
PDN
UJA
KLN
RHU
SJP
RUSL
UOM
UVPA
UWUSL
WUSL
SPALEE CAC
VAUNIYA
GWAI
IIM
TRINCOMALEE
BPU
PGIE
NCAS
SVIAS
UGC
18
18
29
7
59
51
12
68
28
64
10
2
9
3
6
2
4
3
8
1
1
1
2
4
2

## பூர்த்தி செய்யப்பட்ட மானியங்கள்

2017 ஆம் ஆண்டில் பின்வரும் 61 புலமைப்பரிசில் பெறுனர்கள் தமது உயர்கல்வியினை NCAS இன் நிதியுதவியுடன் பெற்று வருகின்றனர்.

| இல | முதற் பெயர் | ஆராய்ச்சித் தலைப்பு | ஆராய்ச்சித் துறை | எதிர்பார்க்கப்படும் பட்டம் | பதிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|---|
| 1 | எ.ரொபின்சன் | இரண்டாம் தலைமுறை தமிழ் புலம்பெயர்ந்தோர் மத்தியில் அடையாளத்தை உருவாக்குதல் | சமூக விஞ்ஞானங்கள் | முதுதத்துவமாணி | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 2 | சி.கஸ்தூரியாரச்சி | இலங்கையில் பாடசாலை சார்ந்த முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு விசாரணை | சமூக விஞ்ஞானங்கள் | கலாநிதிப் பட்டம் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 3 | எஸ்.டி.பி. இடமல்கொட | உயர் கல்வியில் ஒத்திசைவு மற்றும் ஒத்திசைவுக் கற்றல் சூழல்கள் மூலம் பேச்சு அடிப்படையிலான ஆங்கில மொழி கற்றல் | மொழி | கலாநிதிப் பட்டம் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 4 | ஆர்.சேனாநாயக்க | மயூர சந்தேசவின் விமர்சன ரீதியான பதிப்பு | சிங்களம் | கலாநிதிப் பட்டம் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 5 | ஜி.தில்லைநாதன் | மட்டக்களப்பு விவசாய சமதாயத்தில் பூகோளமயமாக்கல் தாக்கம்- ஒரு சமூகவியல் பகுப்பாய்வு | சமூக விஞ்ஞானங்கள் | கலாநிதிப் பட்டம் | கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை |
| 6 | எஸ்.உமாசங்கர் | இரண்டாம் மொழிக் கல்வி என்ற ரீதியில் ஆங்கில மொழியைப் பரிசீலனை செய்வதன் விளைவு | ஆங்கில மொழி | கலாநிதிப் பட்டம் | கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை |
| 7 | டி.பிரபாகரன் | இலங்கை வங்கி நிர்வாகிகளிடையே தொழில் சார் மன அழுத்தங்களில் மாறிகளின் செல்வாக்கு | முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் | கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை |
| 8 | எம்.ஐ மனூஹா | யூனானி உணவு வழிமுறைகளின் சிறப்புக் கண்ணோட்டத்துடன் பெண்கள் உடற்பருமன் முகாமைத்துவத்தில் இயற்கை உணவுச் சேர்க்கைகள் மற்றும் மனதினை ஒருமுகப்படுத்தும் உடற்பயிற்சித் திறன் | ஆயுர்வேதம் | கலாநிதிப் பட்டம் | சுதேச மருத்துவ நிறுவகம் |
| 9 | ஜெ.எம் சுதர்மாவதி | மத்திய கால இலங்கையின் பொருளாதாலர வரலாறு (கி.மு. 1232 இலிருந்து 1467 வரை) | வரலாறு | கலாநிதிப் பட்டம் | களனிப் பல்கலைக்கழகம் |
| 10 | ஆர்.எ.எ.எஸ் பெரேரா | வங்கித் துறையில் மனித மூலதனம்: இலங்கை மற்றும் நியூஸிலாந்து நாடுகள் குறித்த விரவான ஆய்வு | வர்த்தகம் | கலாநிதிப் பட்டம் | களனிப் பல்கலைக்கழகம் |
| 11 | எச்.எ.கெ.என்.எஸ் சுரன்ஜி | பெண் தொழில் முயற்சியாண்மை வலைப்பின்னல்களின் பங்கு: இலங்கையில் ஒழு சிறிய வணிக சுற்றுலாத் துறைமைய அடியொட்டிய ஆய்வு | வர்த்தகம் | கலாநிதிப் பட்டம் | களனிப் பல்கலைக்கழகம் |
| 12 | ஜி.வி. ஹேவாகம | மனித வள முகாமைத்துவம் மற்றும் சேவை மீட்புச் செயற்றிறன் | மனித வள முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் | களனிப் பல்கலைக்கழகம் |
| 13 | எம்.எம்.எம் சாமில் | பெறு நிறுவன உறுதியற்ற தன்மை மற்றும் பெறு நிறுவன நிதி செயற்றிறன் ஆகியவற்றுக்கிடையிலான உறவை ஆய்வு செய்தல் | வர்த்தகம் | கலாநிதிப் பட்டம் | களனிப் பல்கலைக்கழகம் |
| 14 | டபிள்யு.எம்.ஆர்.கெ வீரகோன் | இலங்கையில் உள்ள பொழுதுபோக்கு விளையாட்டுக் கழகத்தின் வரலாற்று மதிப்பீடு:பிரித்தானிய காலனித்துவ காலத்தின் சிறப்பக் குறிப்புக்களுடன் | சமூக விஞ்ஞானங்கள் | கலாநிதிப் பட்டம் | களனிப் பல்கலைக்கழகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | டபிள்யு. எம்.எ.எம் ஜயவர்தன | ஹு" டஸ் சமூக விளையாட்டு அபிவிருத்தியானது ஒரு நாட்டின் தேசிய விளையாட்டு வெற்றிக்கு உதவுகிறது | சமூக விஞ்ஞானங்கள் | கலாநிதிப் பட்டம் | களனிப் பல்கலைக்கழகம் |
| 16 | எஸ்.எ.பி.எம் மனுரத்ன | வீரர்கள் மற்றும் துரோகிகள்: உலக இலக்கியம் மற்றும் சினிமாவில் வன்முறை மற்றும் எதிர்ப்பு | மொழிகள் | கலாநிதிப் பட்டம் | களனிப் பல்கலைக்கழகம் |
| 17 | எஸ்.எம்.எ குமார சமரகோன் | சிறிய அரசுகள் மற்றும் வெளிச் சமநிலை:இலங்கை விடயத்தில் யதார்த்த தத்துவத்தைப் பரசீலித்தல் | முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |
| 18 | பி.கலாவலி | இலங்கையின் பிரச்சினைகள் மற்றும் தீர்வில் இரண்டாம் மொழியாக ஆங்கிலம்-சிங்களம் கற்பித்தல் | முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |
| 19 | இ.எம்.எச்.எஸ்.கெ ஏகநாயக்க | இலங்கையின் கட்டுமானத் துறையில் சறுசுறுப்பான செயல்திட்ட முகாமைத்துவத்தின் பயன்பாடு | முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |
| 20 | டபிள்யு.பி. ஆர் விக்ரமரத்ன | தொழில் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கை சுய நிர்வகிப்பிற்கான நிறுவன ஆதரவு மற்றும் தெழில் திருப்தி மற்றும் தொழில் திருப்திப ற்றிய நிறுவன ஆதரவு : இலங்கை கொமர்சல் வங்கியின் அனுபவ ஆய்வு | அரசியல் விஞ்ஞானம் | கலாநிதிப் பட்டம் | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| 21 | எஸ். மகேஸ்வரன் | சட்டம்- நம்பிக்கைச் சூழ்நிலைகளில் இலாப நோக்கற்ற நிறுவனங்களின் நிலைத்தன்மையின் தனித்துவமான சார்பு மூலதனம் | மொழிகள் | கலாநிதிப் பட்டத்திற்கு இட்டுச் செல்லும் முதுதத்துவமாணிப் பட்டம் | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| 22 | எ.சர்ஜு"ன் | இலங்கையில அபிவிருத்தி நிர்வாகம்: கல்முனை நிர்வாக மாவட்டத்திற்காக சிறுபாண்மையோர் கேள்வி | வரலாறு | கலாநிதிப் பட்டம் | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| 23 | ஆர். செனவிரத்ன | நவீனகால பெனாரசில் ஸ்போட்டாவின் மறுமலர்ச்சி: Sesakrsna’s sphotatavanirupana | பொருளியல் | கலாநிதிப் பட்டம் | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| 24 | பி.எச்.எம்.டபிள்யு. போகிங்கமுவ | இலங்கை மற்றும் இந்தியப் பெருங்கடல் தொடர்பு: வரலாற்றுப் புனைவுகளுக்கு எதிரான பொருள் உண்மைகள் | புவியியல் | கலாநிதிப் பட்டம் | உறுகுணை பல்கலைக்கழகம் |
| 25 | கெ.எ. நிசாந்தா | இலங்கையில் அரச பல்கலைக்கழ கல்வியில் தொழில்நுட்ப திறன்:சமூக விஞ்ஞான துறையிலான ஒரு ஆய்வு | சமூக விஞ்ஞானங்கள் | கலாநிதிப் பட்டத்திற்கு இட்டுச் செல்லும் முதுதத்துவமாணிப் பட்டம் | உறுகுணை பல்கலைக்கழகம் |
| 26 | பி.எச். அமரவீர | இலங்கையில் காலநிலை மாற்றம் மற்றும் தொடர்புடைய இயற்கைப் பேரழிவு ஆபத்து | சிங்களம் | கலாநிதிப் பட்டம் | உறுகுணை பல்கலைக்கழகம் |
| 27 | பி.ஆர் ஏகநாயக்க | நவீன இலங்கைச் சமூகத்தில் பெருகி வரும் சுகாதார அபாயங்கள் சூழலில் ஆயுர்வேத மருத்தவ முறையின் பங்கு | புவியியல் | கலாநிதிப் பட்டம் | உறுகுணை பல்கலைக்கழகம் |
| 28 | எஸ்.பி. கஹன்டகமகே | ව්‍යවහාර සංඛ්‍යා පිළිබඳ ජනශ්‍රැති විද්‍යාත්මක අධ්‍යාපනයක් | வரலாறு | கலாநிதிப் பட்டம் | உறுகுணை பல்கலைக்கழகம் |
| 29 | ஆர்.எ.எஸ்.பி ரணபாகு | இலங்கையில முதிர்ச்சியடைவதற்குப் பொருத்தமான வயது குறித்த ஒரு சிறப்பப் பகுப்பாய்வு | சிங்களம் | கலாநிதிப் பட்டம் | உறுகுணை பல்கலைக்கழகம் |
| 30 | சி.எல் கமகே | இலங்கையில் எல்.டீ.டீ.இ இயக்கத்தின் உருவாக்கத்தினால் பாதிக்கப்பட்ட சமூக அரசியல் மற்றும் பொருளாதார சூழல்: நுண்மையான பகுப்பாய்வு | கணக்கீடு | கலாநிதிப் பட்டம் | உறுகுணை பல்கலைக்கழகம் |
| 31 | புனித. எம் ஆரியவன்ச | புராதனச் சிங்கள மொழியில் வினைச்சொல்லின் கட்டமைப்பு ஆய்வு | சிங்களம் | கலாநிதிப் பட்டம் | உறுகுணை பல்கலைக்கழகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 32 | எம்.டபிள்யு .இந்திராணி | பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளில் சுற்றுச்சூழலில் முகாமைத்துவச் சிக்கல்களுக்கு பதிளளிப்பதில் முகாமைத்துவக் கணக்கியலின் பங்கு: இலங்கைச் சூழலில் ஒரு ஆய்வு | முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் | உறுகுணை பல்கலைக்கழகம் |
| 33 | டி.பி.பி.ஜி லியனகே | விளம்பரம் மற்றும் நாட்டுப்புறத்தின் ஒரு கலவை:ஒரு லகானியன் ஆய்வு | முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் | உறுகுணை பல்கலைக்கழகம் |
| 34 | டி.எம்சி தசநாயக்க | இலக்குத் தேர்வு குறித்த இலக்கு மதிப்பப் பரிமாணங்களின் செல்வாக்கு: இலங்கைக் வருகை தரும் இந்தியப் பார்வையாளர்கள் மீதான ஓர் ஆய்வு | முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் | இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் |
| 35 | டபிள்யு.எம்.ஆர்.பி வீரசூர்ய | இலங்கை அரச சார்பற்ற நிறுவனத்தில் சாதனைக்கான மூலோபாயத் திட்டமிடல் தாக்கம்- மதிப்பீட்டுச் சமநிரைலயைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்தல் | முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் | இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் |
| 36 | எம்.எச் தௌபீக் | இலங்கையின் உயர்கல்வி நிறுவனங்களில் விரிவுரையாளர்களின் கண்ணோட்டத்தில் இலத்திரனியல் கற்றலுக்குத் தயார் செய்வதற்கான அமுலாக்கம் தொடர்பிலான ஆய்வு | முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் | இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் |
| 37 | எஸ்.எம்.எம் மஸாஹிர் | இலங்கையில் இஸ்லாமியக் காப்பீட்டு நடவடிக்கைச் செயற்பாடு: அபிவிருத்திகள் மற்றும் சவால்கள் | மொழி | கலாநிதிப் பட்டம் | இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் |
| 38 | எம்.பி.எம் அம்ஜாத் | இலங்கையின் பெறு நிறுவனத் துறை அல்லாத வருமான வரி செலுத்துவோர் மற்றும் தொடர்புடைய வரிச் சிக்கல்களின் இணக்க நடத்தை | நிதி | கலாநிதிப் பட்டம் | இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் |
| 39 | ஜெ.டபிள்யு.டி சமிந்த | கணிசமான அசம்பாவித இழப்புக்குப் பிறகு அடையாள மாற்றத்தினைப் புரிந்து கொள்ளுதல்: மீட்பு உத்திகள், சுய கருத்துக்கள் மற்றும் ஒரு பிந்தைய பேரழிவு சூழலில் சொத்துக்களின் பங்கு | முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 40 | யு.எல்.டி.பி அபயசேகர | சிறிய சுற்றுலா நிறுவனங்களில் ஐஊவு களின் வணிக மதிப்பு- ஒரு வழக்கு ஆய்வு | தகவல் தொழில்நுட்பம் | கலாநிதிப் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 41 | பி.டி.கெ.எ குமார | வியாபாரத் தகவல் தொழில்நுட்ப சீரமைவுக்கு முன்னோடி என சுற்றுச்சூழல் நிச்சயமற்ற விளைவுகள் | தகவல் தொழில்நுட்பம் | கலாநிதிப் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 42 | பி.பி லலனி | இலங்கையின் பொருளதார அபிவிருத்தி: இத் துறையானது அவசியமானதா? விவசாயம், உற்பத்தி மற்றும் சேவைப் பிரிவுகள் மற்றும் அவற்றின் தொடர்புனக் என்பன இலங்கையின் அபிவிருத்திக்கு முக்கியத்துவம் ஆனது என்பது குறித்த ஆய்வு செய்தல் இதன் நோக்கமாகும். | வியாபாரப் பொருளியல் | கலாநிதிப் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 43 | கெ.ஜி.பி.கெ வீரகோன் | கொழும்பு நகர்ப்புற விளிம்பில் இலங்கையில் ஸ்கேசியோ- தற்காலிக நகர்ப்புற வளர்ச்சி முறைகளின் மாதிரியாக்கம் | முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 44 | சி.டபிள்யு.சி சில்வா | உற்பத்தி நிறுவனங்களில் ஒருங்கிணைந்த தயாரிப்பு மேம்பாட்டு செயற்றிறன் மீது ICT பயன்பாட்டின் தாக்கத்தை மதிப்பிடவதற்கான ஒரு ஆய்வு | தீர்மானமெடுத்தல் விஞ்ஞானம் | கலாநிதிப் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 45 | எ.ஜி.சி குணதிலக | முதலீட்டாளர் உணர்வு, ஆபத்துக் காரணிகள் மற்றும் சொத்து விலை | நிதி | கலாநிதிப் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 46 | ஆர்.கெ.டி.என்.கெ ராஜபக்ஸ | பிரேமசந்த் மற்றும் மார்டின் விக்ரமசிங்கவின் சிறுகதைகளில் சமூக யதாரத்தம் | மொழி | கலாநிதிப் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 47 | எச்.எம்.எஸ் பிரியநாத் | இலங்கையின் சிறிய நிறுவனங்களின் சமூக மூலதனம் மற்றும் பரிவர்த்தனைச் செலவுகள் | மொழி | கலாநிதிப் பட்டம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் |
| 48 | டி.ஜி தர்மரத்ன | பகிரங்கத் தகவல்கள் மற்றும் மூலதனச் சந்தைச் செயற்றிறன் ஆகியவற்றுக்கான சந்தை பதில்: கொழும்பு பங்குச் சந்தையில் இருந்து சான்றுகள் | கணக்கீடு | கலாநிதிப் பட்டம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் |
| 49 | ஜெ.கெ.சி திசாநாயக்க | இலங்கையின் ஆங்கில இலக்கியத்தின் உள்ளடக்கத்தை நிர்ணயிக்கும் சமூக மானிடவியல் உள்ளீடு | மொழி | கலாநிதிப் பட்டம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் |
| 50 | ஆர்.ஜி.எஸ் ரத்நாயக்க | ஆங்கில மற்றும் ஹிந்தி வினைச் சொற்றொடரின் மாறுபட்ட பகுப்பாய்வு | மொழி | கலாநிதிப் பட்டம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் |
| 51 | டி. பிரதீபன் | இலங்கையில் தமிழ் இசைப் பாரம்பரியம் | நுண் கலைகள் | கலாநிதிப் பட்டம் | சுவாமி விபுலாநந்த நிறுவகம் |
| 52 | எஸ் சிவரத்னம் | நவீனத்துவம் மற்றும் பின் நவீனத்துவத்தின் அடிப்படையிலல் இலங்கை ஓவியங்கள் பற்றிய பகுப்ப ரீதியான ஆய்வு | நுண்கலைகள் | கலாநிதிப் பட்டம் | சுவாமி விபுலாநந்த நிறுவகம் |
| 53 | கெ.டபிள்யு.எம்.எம்.டபிள்யு.ஐ பெர்டிணன்டோ | சமகால நடைமுறையில் சிங்கள சடங்கு செயல்திறன் உருவாக்கிய ஆழமான உணர்திறன் அனுபவத்தை மாற்றியமைத்தல் | நுண் கலைகள் | கலாநிதிப் பட்டம் | கட்புல மற்றும் அரங்கேற்றற் கலைகள் பல்கலைக்கழகம் |
| 54 | ஆர்.பி.ஐ.ஆர் சேனரத்ன | SME களில் கிளவுட் கம்பியுடிங் உள்வாங்கல்.அவுஸ்திரேலியாவில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் SME மூலம் கம்பியுடிங்கான முக்கியமான காரணிகளை இனங்காண்பது தான் இவ்வாய்வின் நோக்கமாகும். ளுஆநு கிளவுட் கம்பியுடிங்கான ஒரு கலப்பு மாதிரியை உருவாக்கவும். | முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் |

## 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மானியங்கள்

| | பல்கலைக்கழகம் | மானியம் பெற்றவர் பெயர் | ஆராய்ச்சித் தலைப்புக்கள் | ஆராய்ச்சித் துறை | பட்டம் | பதிவு செய்த பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | களனிப் பல்கலைக்கழகம் | எம்.டபிள்யு.எ.டி.என் விஜேயசூர்ய | 19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில் காலனித்துவ இலங்கையின் மரபுவழி சமூகக் கட்டமைப்பினதும் மதிப்பீட்டு முறைமைகளினதும் இயந்திரத்தின் உந்துதலின் செல்வாக்கு | தொல்பொருளியல் | கலாநிதிப் பட்டம் | கலிபோர்னியா பல்கலைக்கழகம் இ ஐக்கிய அமெரிக்க இராச்சியம் |
| 2 | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் | எம்.எ.சி.எச் பெரேரா | இலங்கை காப்பீட்டுச் சந்தையினுள் இடையூறுகள் மற்றும் வாழ்வாதார காப்புறுதிக் கொள்முதல் நடத்தை | சந்தைப்படுத்தல் | கலாநிதிப் பட்டம் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 3 | கொழும்பு பல்கலைக்கழகம் | டபிள்யு.டி.டி.ஜி அபயவிக்ரம | இலங்கையில் உள்ள முக்கிய இனக்குழுக்கள் மத்தியில் இறப்பு வெறுபபாடுகளைக் குறைத்தல் | குடியியல் | கலாநிதிப் பட்டம் | சவுத்எம்ப்டன் பல்கலைக்கழகம் இ ஐக்கிய இராச்சியம் |
| 4 | பேராதனைப் பல்கலைக்கழகம் | திரு.ஆர்.எம்.எம் ரத்நாயக்க | கலாச்சாரம், தனித்துவம், வெற்றிகரமான அல்லது தோல்வியுற்ற நிலை (சிங்கள நாவலில் தோல்வியடைந்த/ தோற்கடிக்கப்பட்ட/ செயலற்றதாகப் பெயரிடப்பட்ட கதாபாத்திரங்களின் மீதான ஒரு ஆய்வு | மொழி | கலாநிதிப் பட்டம் | களனி பல்கலைக்கழகம் |
| 5 | மொறட்டுவ பல்கலைக்கழகம் | கெ.என் லியனபதிரன | மனித உரிமைகள் பாதுகாவலர்களாக தொழிற்சங்கங்களின் மாறும் முகம்: இலங்கை நிலைப்பாட்டில் இருப்பதற்கான உத்திகள் மற்றம் உற்பத்தி வழமுறைகள் | சட்டம் | கலாநிதிப் பட்டம் | குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (ஞுருவ) அவுஸ்திரேலியா |
| 6 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | டபிள்யு.ஐ ஏகநாயக்க | Efficacy of deferent types of unfocused written corrective feedback(WCF) on the acquisition of simple present tense structure and the definite article "the" | மொழியியல் | கலாநிதிப் பட்டம் | கர்டின் பல்கலைக்கழகம் இ அவுஸ்திரேலியா |
| 7 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | எம்.எ.எம் குணசேகர | முகாமைத்துவ மதிப்பீட்டுத் திசையமைப்புக்கள்இ முகாமைைத்துவக் கலாச்சாரங்கள்இ மற்றும் உற்பத்தித் திறன் செயற்றிறன் ஆகியவற்றின் இடையேயான உறவு – உள்ளக மற்றும் வெளிநாட்ட நிறுவனங்களின் உற்பத்தித் தறன் உந்ததல் கலாச்சாரங்களின் அனுபவ ஆய்வு | முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் | மெஸி பல்கலைக்கழகம் இ நியூஸிலாந்து |
| 8 | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | எம்.டி.எம்.எம்.யு மஹவத்த | LI ஊடகத்திலிருந்து ஆங்கில ஊடகத்திற்கான பரிமாற்றம்: மூன்றாம் மட்ட நிலையில் இருமொழி பற்றிய ஆய்வு | மொழியியல் | கலாநிதிப் பட்டம் | களனி பல்கலைக்கழகம் |
| 9 | பேராதனைப் பல்கலைக்கழகம் | எம்.எ.எஸ்.பி மன்திலகே | இயற்கையின் கொண்டாட்டம்:கொஹம்ப கங்காரியா இலங்கையின் நடன சடங்கு மற்றும் இயற்கையின் மீதான பௌத்த முன்னோக்கு | அரங்கியல் நடனம் மற்றும் செயலாற்றல் கற்கை | கலாநிதிப் பட்டம் | மேரிலேன்ட் பல்கலைக்கழகம் இ ஐக்கிய அமெரிக்க இராச்சியம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | உறுகுணை பல்கலைக்கழகம் | எச்.என்.த சில்வா | நிலப் பயன்பாடு மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் இலங்கையில் நிலச் சீரழிவு மற்றும் பயிர் உற்பத்தியில் பாதிப்புச் செலுத்தும் | பொருளியல் | கலாநிதிப் பட்டம் | குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (ஞுருவு) அவுஸ்திரேலியா |
| 11 | திருகோணமலை வளாகம் | என். வர்ணகுலேந்திரன் | பிரபகராஜா கட்பத்தின் ஹீமியொபொய்டிக் மற்றும் நோயெதிர்ப்புச் செயற்பாடு- பாண்டு (அனீமியாவுனக்கு ஒத்திசைவு மருந்து) | சித்த மருத்துவ மருந்தகவியல் | கலாநிதிப் பட்டம் | தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம் இ இந்தியா |
| 12 | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | டபிள்யு.எ.எஸ்.எஸ் விஜேசிங்ஹ | படங்களைக் கொண்ட ஆரோக்கிய முன்னெச்சரிக்கை முதல் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் புகையிலை வரை மாறும்போதான சந்தைச் சட்டங்களின் தாக்கம் | சட்டம் | கலாநிதிப் பட்டம் | குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (ஞுருவு) அவுஸ்திரேலியா |
| 13 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | எம்.எம்.கெ ரத்நாயக்க | 2009-2016 ஆண்டு காலப்பகுதிகளில் இலங்கையின் மோதல்களில் தப்பிப் பிழைத்துக்கொண்டவர்களுக்கான கலாசார பிரதிநிதித்துவங்கள் | ஆங்கில இலக்கியம் மற்றும் மானுடவியல் | கலாநிதிப் பட்டம் | ஹில்டஸ்பாஸ்கி பல்கலைக்கழகம் |
| 14 | கொழும்பு பல்கலைக்கழகம் | டி.எம்.எஸ்.எல்.பி திசாநாயக்க | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுக்கான GIS வலையினைப் பயன்படுத்திய புத்திக்கூர்மையான தகவல் மையம்-இலங்கையின் கண்டி மாவட்டத்தை அடியொட்டிய ஆய்வு | முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் | சுகுபா பல்கலைக்கழகம் இ ஜப்பான் |

## குயின்ஸ்லான்ட் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்-(அவுஸ்திரேலியா)- NCAS கலாநிதிப் பட்ட நிகழ்ச்சித் திட்டம்

தகைமைகளைக் கொண்ட முனைவர்களுக்கு குவின்ஸ்லன்ட் பல்கலைக்கழகத்தில் உரிய பீ.எச்டி நிகழ்ச்சித் திட்டங்களில் சேர்ந்துகொள்வதற்கான புலமைப்பரிசில்களை வழங்குவதற்காக உயர் கல்வி அமைச்சும் அவுஸ்திரேலிய குவீன்ஸ்லன்ட் பல்கலைக்கழகமும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. குறித்த ஒப்பந்தம் 5 வருடங்களுக்கு செல்லுபடியாகும். அதன் பிரகாரம் ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு இலட்சம் அவுஸ்திரேலிய டொலர்கள் வீதமாக வருடாந்த பாடநெறி கட்டணத்தை விடுவிப்பதற்கு குவின்ஸ்லன்ட் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் இணக்கம் தெரிவித்ததுடன் மூன்று வருடங்களுக்கான வாழ்க்கைச் செலவு கொடுப்பனவைச் செய்வதற்காக ஒரு வருடத்திற்கு 18,610 அவுஸ்திரேலிய டொலர்கள் என்ற முறையிலும் சுகாதார காப்புறுதி தொடர்பில் ஒரு வருடத்திற்கு 2,451 அவுஸ்திரேலிய டொலர்கள் என்ற முறையிலும் வழங்கப்படும்.
அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டில் குறித்த புலமைப் பரிசில் திட்டத்தின் ஊடாக மொத்தமாக 02 முனைவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்வரும் பல்கலைக்கழக முனைவர்கள் 2017 ஆம் ஆண்டு நிதி உதவிகளைப் பெற்றுக்கொண்டு குவின்ஸ்லன்ட் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் பீஎச்டி கல்வி அலுவல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

| | பெயர் | ஆய்வுத் தலைப்பு | ஆய்வு துறை | பட்டம் | பணியாற்றும் பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|---|
| 1. | டபிள்யு.எ.டி.செ ஜ சுமனதாச | வேலைவாய்ப்பு ஒப்பந்தங்கள் மூலம் வர்த்தக இரகசியங்களைப் பாதுகாத்தல்- புதிய முன்மாதிரியை நோக்கி | சட்டம் | கலாநிதிப் பட்டம் 2014 | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| 2. | டி.எம்.என்.டி தென்னகோன் | இலங்கையில் குடிமகனை மையப்படுத்திய பொதுத் துறைஉளஉறவை நோக்கி- சிறந்த நடைமுறைகளை மாற்றியமைப்பதன் மூலம் மனித வளத்தின் மீது பரிவர்த்தனை செய்தல் | முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் 2014 | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| 3. | டி.எல்.எப் சாமிலா | நிலையான முதலீட்டுக்காக முதலீடாக சர்வதேச முதலீட்டு ஒப்பந்தங்கள் | | கலாநிதிப் பட்டம் 2015 | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| 4. | எ.டபிள்யு.ஜெ.சி அபயகுணசேகர | வியாபார செயன்முறை முகாமைத்துவத்தில் முகாமைத்துவக் கட்டுப்பாட்டு முறைமையின் பங்கு | வியாபார செயன்முறை முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் 2015 | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| 5. | டி.எம்.சி.பி குமாரி | சுகாதார நல பெரிய தரவிற்கு பெறுப்பிற்குரிய தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பங்கள் | கணினி விஞ்ஞானம் | கலாநிதிப் பட்டம் 2015 | உறுகுணை பல்கலைக்கழகம் |
| 6. | எச்.டி. விஜயசேகர | இனங்களின் மாணவர்களிடையே சமூக ஒத்துழைப்புக்கான இரு மொழிகள் குறித்த தாக்கம்: இலங்கையை மையப்படுத்திய ஒரு ஆய்வு | கல்வி | கலாநிதிப் பட்டம் 2014 | ஆங்கிலப் பட்டப் பின் கற்கை நிறுவகம் |
| 7. | டபிள்யு.எம்.எ.கெ விஜயகோன் | புதுமை அடிப்படையிலான போட்டித்திறன் மூலோபாயத்தில் வாடிக்கையாளரின் துணிச்சலான பங்கை ஆய்வு செய்தல்- கேள்வியை அடியொட்டிய கண்ணோட்டம் | முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் 2016 | மொறட்டுவ பல்கலைக்கழகம் |
| 8. | கெ.வி.கெ.டி வஸ்ஸல | படிவ அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் ஊயுனு தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி அணிதல் வடிவமைப்புக்குரிய பிரதான தெரிவுப் பிரமாணத்தினை அபிவிருத்தி செய்தல் | படைப்பாக்க நிறுவனங்கள் பீடம் | கலாநிதிப் பட்டம் 2016 | மொறட்டுவ பல்கலைக்கழகம் |
| 9. | டபிள்ய.எ.டி.எ ன் விக்ரமாரச்சி | நிலையான தொழில் முனைவுக் கலாச்சாரத்தினை நிறுவனமயமாக்கவதில் உள்ள குடியேற்ற பங்கு | முயற்சியாண மைஇ புத்தாக்கம் மற்றும் மூலோபாயம் (வியாபாரம்) | கலாநிதிப் பட்டம் 2016 | மொறட்டுவ பல்கலைக்கழகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. | பி.எம்.டபிள்யு.யு.சி.பி ஜயசுந்தர | STEM பாடங்களில் மாணவர்களின் மனப்பான்மை மற்றும் ஈடுபாடு: சீரற்ற கட்டுப்பாட்டுச் சோதனை மூலம் ஒரு ஆய்வு | நடத்தை சார் பொருளியல் | கலாநிதிப் பட்டம் 2016 | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 11. | எ.ஐ. இருகல்பண்டார | இலங்கையில் கனிஸ்ட இரண்டாம் நிலைப் பள்ளி மாணவர்களின் உயர்சிந்தனைத்திறனை அபிவிருத்தி செய்வதற்கான நாடகச் சிகிச்சையின் பயன்பாடு | நாடகக் கல்வி | கலாநிதிப் பட்டம் 2016 | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |
| 12. | டபிள்யு.எம்.எஸ்.கெ வணிகசேகர | பெண் முகாமையாளர்கள், வலைப்பின்னல் மற்றும் தொழில் அபிவிருத்தி | மனித வள முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் 2016 | களனிப் பல்கலைக்கழகம் |
| 13. | எச்.எச்.எ.ஜெ குணதிஸ்ஸ | இலங்கையில் வர்த்தக ஒழுக்கவியல் குறித்த முகாமையாளர் கருத்தாய்வு | வியாபார விழுமியங்கள் | கலாநிதிப் பட்டம் 2016 | பேராதனிய பல்கலைக்கழகம் |
| 14. | வை. அழககோன் | அறிவு முகாமைத்துவத்தை மீளப்பயன்படுத்துதல்: பௌத்த மத உணர்வியல் முன்னோக்கு | வியாபார முகாமைத்துவம் | கலாநிதிப் பட்டம் 2016 | களனிப் பல்கலைக்கழகம் |

- 2017 ஆம் ஆண்டினுள் 07 பல்கலைக்கழக கல்வியியலாளர்கள் (* 04 பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் காத்திருப்பில் இருக்கின்றனர்) குயின்ஸ்லான்ட் தொழில்நுட்பப் பல்கலைக்கழக புலமைப்பரிசில் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டிருப்பதுடன் அவர்கள் தமது கற்கையினை குயின்ஸ்லான்ட் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா வில் ஆரம்பித்துள்ளனர்.

| | **மானியம் பெறுநர் பெயர்** | **ஆய்வுத் தலைப்பு** | **ஆய்வுத் துறை** | **பல்கலைக்கழகம்** | **பட்டம் பெற்ற பல்கலைக்கழகம்** |
|---|---|---|---|---|---|
| 01 | திரு.டபிள்யு. எ.எஸ்.எஸ் விஜேசிங்ஹ | படங்களைக் கொண்ட ஆரோக்கிய முன்னெச்சரிக்கை முதல் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் புகையிலை வரை மாறும் போதான சந்தைச் சட்டங்களின் தாக்கம் | சட்டம் | இலங்கை திறந்த பலல்கலைக்கழகம் | கலாநிதிப் பட்டம் |
| 02 | கெ.என் லியனபதிரன | மனித உரிமைகள் பாதுகாவலர்களாக தொழிற்சங்கங்களின் மாறுபட்ட முகம்: இலங்கையின் நிலைப்பாட்டு இருப்புக்கான உத்திகள் மற்றும் உற்பத்தி வழிமுறைகள் | சட்டம் | பேராதெனிய பல்கலைக்கழகம் | கலாநிதிப் பட்டம் |
| 03 | திரு.டபிள்யு.டி.என் விஜேயசிறி | போருக்குப் பிந்திய இலங்கையின் சமரசத்தில் டிஜிட்ல் மீடியாவின் கதைசார் தலையீடு | டிஜிட்டல் ஊடகம் | பேராதெனிய பல்கலைக்கழகம் | கலாநிதிப் பட்டம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 04 | டி. வடிவேலு | சமூக ஊடகச் சந்தையினுள் சந்தைப்படுத்தல் உபகரணமாக கருதுகோள் உருவாக்கம் மற்றும் அளவு அபிவிருத்தி ஆகியவற்றின் சுயாதீனமான நம்பிக்கைத்தன்மை | முகாமைத் தவம் | வவுனியா வளாகம் | கலாநிதிப் பட்டம் |
| 05 | கெ.எம்.கெ.என். எஸ் குலதுங்க | டிவைடன்ட் கொள்கை உணவு வழங்கலை உற்சாகப்படுத்துவதன் பின்பற்றியதன் பிற்பாடு ஒன்று சேர்த்தல் மற்றும் கையகப்படுத்திக் கொள்ளல்: இலங்கை ஆதாரம் | நிதியியல் | களனிப் பல்கலைக்கழகம் | கலாநிதிப் பட்டம் |
| 06 | டி.சி. ஹெட்டியாரச்சி | இலங்கையில் தேயிலை துறையில் பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு (CSR) நடைமுறைகள்: நாட்டின் முன்னோக்கு அபிவிருத்தி | கணக்கிய ல் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | கலாநிதிப் பட்டம் |

**<u>நூலகம்/E-வளங்கள்</u>**

**<u>உயர் சமூகக் கற்கைகளுக்கான இலங்கை சஞ்சிகை</u>**

- பாகம்.5 இல 1 மற்றும் 2 சஞ்சிகையானது வெளியிடப்பட்டது. இச் சஞ்சிகையானது பல்கலைக்கழகங்கள் மற்றும் அதனை விரும்பிக் குறிப்புச் செய்தவர்களுக்கு (Subscribers) மத்தியில் பகிர்ந்தளிக்கப்படும்.
- பாகம் 6 இற்கான ஆய்வுக் கட்டுரைகள் தற்சமயம் மீளாய்விற்காக வேண்டி சேர்க்கப்பட்டிருக்கின்றன.

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அறிக்கை - 2017

கணக்காய்வு குழு சுயாதீனமான மற்றும் நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்கள் 4 பேரை உள்ளடக்குகின்றது கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவராக திறைசேரி பிரிதிநிதியொருவர் பங்குபற்றுகின்றார். பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு அலுவலர் மற்றம் என்.சி.ஏ.எஸ். நிறுவன உள்ளக கணக்காய்வு அலுவலர் மேற்பார்வையாளர்களாக பங்குபற்றுகின்றனர். அதேபோன்று குழுவின் மேற்பார்வைாளராக பங்குபற்றுமாறு கணக்காய்வாளர் திணைக்களத்தின் பிரதிநிதியொருவருக்கும் அழைப்பு விடுக்கப்படுகின்றது. மீளாய்வாண்டினுள் அதாவது 2017 இல் 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்தொடர்கள் இடம்பெற்றன.

காலத்துக்குக்காலம் வெளியிடப்பட்ட நல்லாட்சிக்கான அரச ஆலோசனைச் சுற்றிக்கையினை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வுக்குழுவின் சட்டவவரையறை தயார் செய்யப்பட்டுள்ளது.

### கணக்காய்வுக் குழுவின் விடயப்பரப்பு

அமைப்பின் உள்ளக நிர்வாகக் கட்டமைப்பின் மீளாய்வு மற்றும் மதிப்பீட்டுக் கொள்கைகள் ஒழுங்குவிதிகள் சட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்குகின்றதா என உறுதிப்படுத்திக் கொள்ளல் கணக்கிட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்தல். நாளாந்தம் முறையாக அமைப்பின் செயலாற்றுகையினை மீளாய்வு செய்தல் உள்ளக , வெளியக கணக்காய்வு மற்றும் தொடர்பு மற்றும் உள்ளக கணக்காய்வு அறிக்கை மற்றும் கணக்காளர் அறிக்கையினை கடைப்பிடித்தல்.

### கணக்காய்வுக் குழுவின் செயற்பாடுகள்

மீளாய்விற்கு உள்ளடக்கப்பட்ட வருடம் தொடர்பாக பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழவின் உள்ளக கணக்காய்வினால் வெளிப்படுத்தப்பட்ட அவர்களின் பட்டப்பின்படிப்பு கற்கைக்கு புலைமைப்பரிசில்களை வழங்கும் கல்வியியலாளர்களின் பட்டப்பின்படிப்பு தகைமைகள் பற்றிய முன்னேற்ற மீளாய்வு குழு மீளாய்வு செய்து மேலும் சகல நியதிச்சட்ட தேவைகளினை பூர்த்தி செய்துள்ளதாக நியாயமான சான்றிதழ் ஒன்றினை வழங்குதல் உள்ளக நிர்வாக முறைமை மீளாய்வு செய்துள்ளது. வருடத்துக்கான கணக்காய்வாளரின் அறிக்கையினை கலந்துரையாடலுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வாளரினால் தமது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை சீர்செய்வது தொடர்பாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி குழு திருப்தி அடைகின்றது.

இப்படிக்கு
பேராசிரியர்.இந்திர லால் த சில்வா
தலைவர் / கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

NCAS

**மானிடவியல்,சமூக விஞ்ஞான உயர் கல்விக்கான தேசிய நிலையம்**

# நிதிக் கூற்றுக்கள்

2017

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது**

## 1. நிறுவனம் சார் தகவல்கள்

### 1.1 நிலை பேறாக இருத்தலும் சட்ட வடிவமும்

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்தில் உயர் கல்விக்கான தேசிய நிலையம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நிலையமாகும்.இந் நிலையம் இலங்கையில் நிலைபேறாக இருப்பதுடன், இல 06 ஏ,சுகஸ்தன் கார்ட்ன், வோட் பிளேஸ், கொழும்பு 07 என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

### 1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகிய துறைகளில் உயர் கல்வியையும் ஆராய்ச்சியையும் ஊக்குவித்தல்.

இந் நிலையத்தின் தொடர்ந்திருத்தல் தன்மையானது அரசாங்க மானியத்தின் மூலம் தொழிற்படுவதில் தங்கிக் காணப்படுகிறது. மேலும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு முதுதத்துவமாணி/கலாநிதி பட்ட புலமைப்பரிசில்கள் வழங்குவதற்கு நிதியை வழங்குகின்றது.

### 1.3 ஊழியர்களின் எண்ணிக்கை

ஆண்டிறுதியில் ஊழியர்களின் எண்ணிக்கையானது 14 ஆக காணப்பட்டது.

## 2.கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.1இணக்கக் கூற்று

NCAS இன் நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் (CA) மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பொதுவாக ஏற்றுக்கொள்ளத்தக்க கோட்பாடுகள் மற்றும் அரச துறை கணக்கியல் நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது. அமைப்பின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கணக்கு மீதிகளுடன் செயற்படுகின்ற அறிமுகப்படுத்தப்பட்ட அரச துறை கணக்கியல் நியமங்கள் இல்லாதவிடத்து, இந் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது மற்றும் அறிக்கையிடல் நியமத்தின் (SLFRS) உரிய ஏற்பாடுகள் மற்றும் இலங்கை கணக்கியல் நியமங்கள் (LKAS) பயன்படுத்தப்பட்டுள்ளது. பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளானது முன்புள்ள நிதி அறிக்கைகளில் பயன்படுத்தப்பட்டவைகளுடன் முரணற்றதாகவுமுள்ளது.

### 2.2 நிதியியல் கூற்றுக்களுக்கான பொறுப்பு.

NCAS இன் முகாமைத்துவமானது நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் என்பவற்றுக்குப் பொறுப்பாகவுள்ளது.

**2.3 தொடர்ந்திருத்தல்.**

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது முகாமைத்துவம் தொடர்ந்து இருத்தல் மூலம் நிறுவகத்தின் எதிர்கால செயற்பாடுகளை செயற்படுத்திச் செல்லக்கூடிய ஆற்றலை மதிப்பீடு செய்துள்ளது. முகாமையானது NCAS நிலையத்திற்கு முன்னறிவிக்கக்கூடிய எதிர்கால செயற்பாடுகளினால் தொடர்ந்து இயங்குவதற்கான போதிய வளங்கள் உள்ளதென்ற நியாயமான எதிர்பார்ப்பு உள்ளது. NCAS நிலையத்தின் எதிர்காலம் பற்றிய சகலவிதமாக பெற்றுக்கொள்ளத்தக்க தகவல்களை பரிசீலனைக்கு உட்படுத்தி, மூடிவிடுவதற்கான அல்லது தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கான தேவையினை எதிர்பார்க்கவில்லை. அதற்கிணங்க,NCAS நிலையத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது தொடர்ந்திருத்தல் அடிப்படையினைப் பயன்படுத்தி முன்னோக்கிச் செல்கிறது.

**2.4 ஐந்தொகைக்குப் பிந்திய விடயங்கள்.**

நிதிக் கூற்றுக்களில் சீராக்கலை அல்லது வெளிப்படுத்தலை தேவைப்படுத்தும் ஐந்தொகைக்குப் பின்னரான பொருண்மையான சம்பவங்கள் எவையும் நிகழவில்லை.

**2.5 சொத்துக்களும் அவற்றின் விலைமதிப்பீட்டின் அடிப்படைகளும்.**

ஆதனம், பொறி, உபகரணம் என்பன திரண்ட பெறுமானத் தேய்வைக் கழித்து ஆகு செலவில் பதியப்படுகின்றன. ஆதனம், பொறி, உபகரணம் என்பவற்றின் ஆகுசெலவானது கொள்வனவின் அல்லது நிர்மாணத்தின் செலவும் அதன் மீதான ஏதேனும் இடைநேர் விளைவான செலவும் ஆகும்.

தேய்மானமானது இலங்கை அரச துறை கணக்கியல் நியமம் (SLPSAS) 7 இற்கிணங்க சொத்துக்கள் பயன்பாட்டுக்கு எடுக்கக் கூடியதாகவுள்ள திகதியிலிருந்து ஏற்பாடு செய்யப் படுகின்றது. ஆதனம், பொறி, உபகரணம் என்பவற்றிற்கான பெறுமானத்தேய்வு அவற்றின் பின்வரும் வீதங்களில் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

| சொத்து | ஓராண்டுக்கு பெறுமானத்தேய்வு விகிதம் |
|---|---|
| கட்டடம் | 5 |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 10 |
| அலுவலக உபகரணம் | 20 |
| கணினிகள் மற்றும் மென்பொருள் | 20 |
| நூலகப் புத்தகங்கள் | 20 |

(மேற்படி வீதங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல. 649 இன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது).

**2.6 பொருட்பட்டியல்கள்**

பொருட்பட்டியல்கள் முதலில் உள்வருவன முதலில் வெளியில் (FIFO) என்ற கிரய அடிப்படையில் விலைமதிப்பீடு செய்யப்படுகிறது.

**2.7 பெறவேண்டியவைகள்.**

பெறவேண்டியவைகள் அவை தேறக் கூடியனவாக மதிப்பீடு செய்யப்படும் தொகைகளில் குறிப்பிடப்படுகிறது.

**2.8 ஊழியர் கடன்.**

அ). ஊழியர் கடன்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வணிக வங்கிக் கடன் வழங்கும் முறைக்கு ஒத்ததான வட்டி விகிதத்தைப் பயன்படுத்தி நிதியியல் உபகரணங்கள் இனங்காணுதல் மற்றும் அளவீடுசெய்தல் பற்றிய LKAS 39இற்கு ஏற்புடையதாக குறைந்துசெல்லும் கிரய முறைக்கமைய மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **2017** | **8.9%** |
| **2016** | **12%** |

**ஆ) முன் செலுத்தப்பட்ட ஊழியர் கிரயம்.**

இந்நிறுவன ஊழியர்களுக்கு சலுகை அடிப்படையில் வழங்கப்பட்ட ஊழியர் கடன்களினால் எழுகின்ற மீதியைச் சுட்டிக்காட்டுகிறது.

**2.9 பொறுப்புகளும் ஏற்பாடுகளும்.**

ஐந்தொகைத் திகதியன்றுள்ளவாறு அறியப்பட்ட எல்லாப் பொறுப்புகளும் நிதிக் கூற்றுக்களில் சேர்க்கப்படுகின்றன. உள்ளனவாக அறியப்பட்ட ஆனால் அவற்றின் தொகையை செம்மையாக்கத் தீர்மானிக்க முடியாதவையுமான பொறுப்புகளுக்கு போதியளவு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

**2.10 மானியங்களுக்கான கணக்கீடு.**

அரசாங்க மானியங்கள் LKAS 20 இற்கு ஏற்புடையாதாக கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கேற்ப அரசாங்கத்திடமிருந்து பெற்ற மூலதன மானியங்கள் பிற்போடப்பட்ட வருமானமாகக் கருதப்படுவதுடன், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பன கிரயச் செலவில் மூலதனமாக்கப்படுவதுடன், மானியங்கள், சொத்துக்களின் பயனுள்ள ஆயுளின் மீது முறையான அடிப்படையொன்றில் ஒரு வருமானமாக இனங்காணப்பட்டுள்ளதுடன், கலாநிதி/முதுதத்துவமாணி மானியங்கள் உட்பட மீண்டெழும் மானியங்கள் குறிப்பிட்ட தவணை வருமானமாகக் கணக்கீடு செய்யப்படுகிறது.

**2.11 மூலதன கடப்பாடுகளும் எதிர்பாரா பொறுப்புக்களும்.**

சகல முக்கிய கடப்பாடுகளும் எதிர்பாரா பொறுப்புக்களும் கருத்திற் கொள்ளப்பட்டு அவசியமானவிடத்து இந்த நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படுகின்றன அல்லது வெளிப்படுத்தப்படுகின்றன.

**2.12 ஊழியர் நலன்கள்**

**விசேடமாக குறிப்பீடு செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்**

ஊழியர்களின் பல்கலைக்கழக சேமலாப நிதிய (UPF) பங்களிப்பு, ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF), பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம் எனும் பங்களிப்புகள் சம்பந்தமான சட்டவிதிகள் மற்றும் நியமங்களுக்கு ஏற்ற வகையில் தகைமை பெறும் NCAS நிலைய, பல்கலைக்கழக சேமலாப நிதியம் மற்றும் ஊழயர் நம்பிக்கை நிதியம், பல்கலைக்கழக ஒய்வூதிய நிதியம் என்பவற்றுக்கு ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுப் படி கூட்டுத்தொகை பிரதான குழுமத்தின் நிலையான பங்களிப்புச் செய்வதுடன், கூடுதலான அளவு செலுத்துவதற்கு சட்டரீதியாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட தேவைப்பாடுகள் இல்லாதுள்ளது.

**உறுதியான பயன் திட்டங்கள்**

உறுதியான பயன்கள் திட்டங்கள் என்பது உறுதியான பங்களிப்புத் திட்டங்கள் தவிர, பின்னரான ஊழியர் திட்டங்களாகும். NCAS நிலையம், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் பணிக்கொடை கொடுப்பனவை வழங்குவதற்கு பொறுப்பாகவுள்ளது. சட்டத்திற்கு இணங்க கட்டுப்படுத்தலுக்கான ஏற்பாடுகள் பின்வருமாறு அரசாங்கத்தின் முறி விகிதாசாரம் மற்றும் உத்தேச ஆண்டுச் சம்பள ஏற்ற விகிதாசாரத்திற்குச் சமமான கழிவு விகிதாசார பயன்பாட்டின் LKAS 19 இற்கு இணங்க நிகழ்கால பெறுமதி முறையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

| ஆண்டு | முறி விகிதம் | சம்பள உயர்வு வீதம் |
|---|---|---|
| **2017** | **8.9%** | **10%** |
| **2016** | **12%** | **10%** |

**2.13 ஊழியர் மற்றும் நிறுவன அபிவிருத்தி நிதியம்.**

ஊழியர் மற்றும் நிறுவன அபிவிருத்தி நிதியமானது செலயலமர்வுகள் மற்றும் கல்விசார் பாடநெறிகள் ஊடாக உள்ளக ரீதியாக உருவாக்கப்படுகின்ற நிதியங்களை உள்ளடக்கியதாக இருக்கும். அத்தொகையானது முகாமையின் தீர்மானத்திற்கு இணங்க முடிவு செய்யப்படும்.

**2.14 எதிர்பாரா சொத்துக்கள்**

பயனாளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்கு இணங்க, மானியங்களை மீள அறவீடு செய்யப்படுகின்ற போது அறவீடு செய்யப்படவேண்டிய பெறுமதிக்கு எதிராக சட்ட நடவடிக்கையினை சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. மானியங்கள் மீளப்பெறும் சம்பந்தப்பட்ட பயனாளிகளிடமிருந்து பெறப்படவேண்டிய தொகைகள் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகிறது. கீழேயுள்ளவை மானியம் வழங்கப்பட்டோரிடமிருந்து வாபஸ் பெறப்பட்ட மற்றும் உரிய பல்கலைக்கழகங்களினால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு மானியம் பெறுவோரிடமிருந்து பெறவேண்டிய தொகைகளாகும்.

| | | | |
|---|---|---|---|
| 2006 | திருமதி.எச்.சிறிவர்தன | ஶ்ரீபாளி | ருபா.500,000/= |
| | திருமதி.ஜெ.டி த சில்வா | பேரா | ருபா.1,602,630/= |
| | திருமதி.டபி.பி.ஜி.எ.என் தசில்வா | களனி | ருபா.3,315,789/= |
| 2008 | திரு.டபி.எம். ஜயந்த | ஶ்ரீபாளி | ருபா.200,000/= |
| 2009 | திரு.அர்.எம்.யு உடகெதர | களனி | ருபா.1,500,000/= |
| 2010 | திரு.வி.வாசு | கொழு | ருபா.750,000/= |

**2.15 ஒப்பீட்டுத் தொகைகள்**

நடைமுறை வெளிப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்காக அவசியமானவிடத்து ஒப்பீட்டுத் தொகைகள் மீள ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.